
# இருக்கிறம்

மாதம் இருமுறை

காத்திருப்பு 3 - இருக்கை 5 · ஒரு பொல்லாப்புமில்லை · 01-03-2009

50/-



கேர்ணல் ஆர். ஹரிஹரன் (ஓய்வு)


## விரும்பாத நினைவுகள்

## மகளிர்தின சிறப்பு

## யுத்தத்தின் குழந்தைகளை நோக்கி




Freido Pinto




## இசைப்புயல் ஏ.ஆர்.ரஹ்மானுக்கு ஒஸ்கார்

ISSN 1800-3699

வினைத்திறன் மிக்க சேவை
நிர்வாகம் மற்றும் பிரஜைகளின்
ஆலோசனை பெறல்
என்பவற்றினூடாக பொருளாதார
வளர்ச்சியினை
மேம்படுத்துவதற்காக பிரதேச
சபை, நகர சபை, மாநகர சபை
என்பவற்றுடன் இணைந்து
செயற்படும் ஒரு உயரிய
அமைப்பே
"இலங்கை ஆசிய நிலையம்"
உள்ளூராட்சி சபைகளின்
வெளிப்படையான தன்மையை
மேம்படுத்தி, சிறந்த பொருளாதார
வளர்ச்சியை பொதுமக்கள்
அடைவதற்கு அர்ப்பணிப்புடன்
பணியாற்றுவதே ஆசிய
நிலையத்தின் முக்கிய
நோக்கமாகும்.



The Asia Foundation


புதுக்குடியிருப்பு
“அவர்கள்தான் கொல்கிறார்கள்”
“நன்றே செய்வாய். பிழை செய்வாய், நானோ இதற்கு நாயகமே”

# பதிப்பகத்தார்..

உலகின் சகல கண்களும் எமது முல்லைத்தீவுப் பிரதேசத்தையே உற்று நோக்கிக் கொண்டிருக்கின்றன. அந்தப் போர்க் களத்தில் ஏற்பட்டுள்ள மானுட அவலங்கள், மனித தர்மத்தின் எல்லைகளைக் கடந்த பேரவலத்தில் இருக்கிறது. மனிதர்களை மறந்து எதிரும் புதிருமாய் எழுந்தாடும் ஆயுதங்களைப் போலவே, இணையத்தளங்களிலும் உலக அரங்குகளிலும் இன்நிலை பற்றிய கருத்துக்களும் எதிரெதிராய் மோதி அனல் கிளப்புகிறது.

வன்னிப் பிரதேசத்தில் சிக்கியுள்ள மக்களை விடுதலைப் புலியினர் பலாத்காரமாகப் பிடித்து வைத்திருக்கின்றனர், அவர்களை புலிகள் வெளியே விடவேண்டும் என்று சர்வதேச மட்டங்கள் பலதரப்புக்களின் உடாக கோரிக்கை எழுப்புகின்றன. மறுபுறமோ, வன்னியில் வாழ்ந்த மக்கள் எல்லோருமே ஏதோவொரு வகையில் விடுதலைப் புலிகள் அமைப்பில் பணிபுரிந்தவர்களாகவோ அல்லது அவர்களிடம் இராணுவப் பயிற்சி பெற்றவர்களாகவோ அல்லது மாவீரர் குடும்பங்களாகவோதான் இருப்பார்கள், எனவே அவர்களும் வரைவிலக்கணப்படி பயங்கரவாதிகள்தான் என்கிறது உள்ளூர் ஞானம்.

இணையத்தளத்தின் பிரபல ஆய்வாளராகக் கருதப்படும் மைக்கேல் ரொபேர்ட்சும் இதே வகையில் தான் திருவாய் மலர்ந்துள்ளார். 'இது புலிகள் வலிந்து வாங்கிய போர். இப்போரில் ஈடுபடுத்தப்பட்ட

## நடப்பதெல்லாம் நன்மைக்கே



அல்லது இணக்கப்பட்ட மக்களே இப்போது வன்னியில் எஞ்சியிருக் கிறார்கள்" என்று கூறியிருக்கும் அவர், மேலும் தனது கட்டுரையில் "இன்று மனித உரிமைகள் பேச ஆயிரம் நாடுகள் முன்வருகின்றன. இத்தகைய நாடுகள் இரண்டாம் உலக மகாயுத்தத்தில் எதிரிக ளுக்கு உணவும் மருந்தும் கொடுத் திருக்கின்றார்களா? ஆனால் இல ங்கை அதைச் செய்தது மட்டுமல்ல செய்தும் வருகின்றது. வன்னி மக் களை அப்பாவிப் பொது மக்கள் என்று சொல்வதோ அல்லது அவர் களை மனிதாபிமான ரீதியில் பாது காக்க கேட்பதோ சுத்தமான அபத்த மாகும். இத்தகைய கோரிக்கை களை சமாதானவாதிகள் மீள்பரிசீ லனை செய்ய வேண்டும்' என்றும் வாதிட்டிருக்கின்றார். மைக்கேல் ரொபேர்ட்ஸின் இக்கட்டுரை இப் பொழுது மிகுந்த சர்ச்சையை ஏற்ப டுத்தியிருக்கிறது.

இந்த இருதரப்பு வாதங்களை யும் ஒருமுறை மீள்பார்வை செய்ய வேண்டியிருக்கிறது. வன்னி மக் களை விடுதலைப் புலிகள்தான் பலாத்காரமாகத் தடுத்து வைத்திரு க்கின்றார்கள் என்பது உண்மை யென்றால், அவர்களைப் பாதுகாப் பாக வெளியே எடுப்பதுதான்



அவர்களுடைய அரசாங்கம் (அதாவது இலங்கை அரசாங்கம்?) செய்யவேண்டிய முதல் கடமையாகும். தமக்கான பாதுகாப்பு வியூகமாக புலிகளால் சிறைப் பிடிக்கப்பட்ட சிறீலங்கா ஜனநாயக சோசலிஷக் குடியரசின் சொந்தக் குடிமக்களை, எறிகணைகளாலும், விமானக் குண்டுகளாலும் அழித்தொழிப்பதுதான்

பௌத்த தர்ம அரசின் போர் தர்மமா என்ற கேள்வி தவிர்க்க முடியாமல் எழுகிறது. ஆயிரக்கணக்கான உறுப்பினர்களை இழந்து, மிக்ச் சிறிய பகுதிக்குள் முடக்கப்பட்டு இன்றோ நாளையோ அழிக்கப்படப் போகிற போகிற ஒரு பயங்கரவாதக் குழு என்றே புலிகளை அரசு சொல்கிறது. தாராளமாக அரசு தன் பணியை செய்யட்டும், ஆனால் அதற்காக அங்கிருக்கும் ஒரு இனம் முழுவதையுமே -கிட்டத்தட்ட இரண்டரை இலட்சம் மக்கள்- ஒட்டுமொத்தப் பயங்கரவாதிகளாகக் இனம்கண்டு அழிக்கலாமா? உண்மையில் இந்தகைய அழிப்பு நடவடிக்கையை "இனப்படுகொலை" என்றுதான் சர்வதேசச் சட்டம் எழுதி வைத்திருக்கின்றது. இவர்களால் சொல்லப்படும் வாதம் எங்கேயோ சறுக்குவது போலத் தெரிகிறது.

நடக்கும் இந்த யுத்தம் மனங்களில் மாறா வடுக்களையும் இரு இனங்களுக்கும் இடையே என்றுமில்லாத ஆழமான பிளவினையும் ஏற்படுத்தியிருக்கிறது. சமாதான



வாதி திரு ஜெகான் பெரேரா அவர்கள் அண்மையில் தனது உரையொன்றில், கிழக்கைச் சேர்ந்த ஒரு சமூகத் தலைவர் தன்னிடம் தெரிவித்த கருத்தொன்றை வந்திருந்தோருடன் பகிர்ந்து கொண்டார். "வன்னியிலிருந்து திருகோணமலைக்கு வந்து சேர்ந்த மக்களின் அவலத்தைப் பார்த்தேன். இதுவரைகாலமும் பிரிவினையைப் பற்றி நான் அவ்வளவாகச் சிந்தித்ததில்லை. இன்றோ பிரிவதைத் தவிர வேறு வழியில்லையென்றே நினைக்கின்றேன்" என்று அத்தலைவர் கூறியதாக ஜெகான் தெரிவித்தார். அவர் மட்டுமல்ல, அந்த நிகழ்வுக்கு வந்த தமிழர் அனேகர் இதே கருத்தை ஏனைய சிங்கள நண்பர்களுக்குப் பகிரங்கமாகத் தெரிவித்துக் கொண்டமை ஆச்சரியத்தைத் தந்தது. அங்கு வந்திருந்த ஒரு பிரசித்தி பெற்ற முஸ்லிம் சமூகத் தலைவி தன்னுடன் நின்றிருந்த தமிழரை நோக்கி, "இனி நாங்கள் உங்களுடன்தான் தோளோடு தோள் சேர்ந்து நிற்க வேண்டும்" என்று கூறினார். அது இன்னும் ஆச்சரியமாகவும் அதிர்ச்சியாகவும் இருந்தது. அந்த தலைவியின் கருத்து முற்றிலும் மாறுபட்ட ஒன்றாக சிறிது காலத்துக்கு முன்பு இருந்ததை நாம் அறிவோம்.



இந்திய வெளியுறவு அமைச்சர் திரு பிரணாப் முகர்ஜியிடம் கடந்த மாதம் முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவுப் ஹக்கீம் அவர்கள், இணைந்த வட கிழக்கில்தான் முஸ்லிம் மக்கள் தகுந்த அதிகாரங்களோடு இருக்கலாம், பிரிந்த கிழக்கில் அரசு தலையீடு அதிகமாக உள்ளது என்று முறையிட்டதை நாங்கள் வாசகர்களுக்கு நினைவூட்ட விரும்புகின்றோம். எம்மையறியாமலேயே இலங்கை அரசியலில் பெரும் திருப்பங்கள் ஏற்படுகின்றன.

இந்த நாட்டின் சிறுபான்மை மக்கள் ஒன்று சேர்ந்து ஒற்றுமையாக எங்கள் அரசியலமைப்புச் சட்டத்தில் தங்கள் நிலையை உறுதிப்படுத்தும் நாள் வந்துவிட்டதா? அப்படி உண்மையாக நடந்துவிட்டால் நடப்பதெல்லாம் நன்மைக்கே என்று எங்கள் முன்னோர்கள் சொன்ன வார்த்தைகளில் அர்த்தம் இருப்பதாக நாங்கள் நம்பத் தொடங்கலாம்.

மகளிர்தின
சிறப்புக் கட்டுரை


# யுத்தத்தின் இளம் குழந்தைகளை நோக்கி



பால்ய திருமணம் என்றதுமே எங்களுக்கு இந்தியாவும் காந்தியும் இன்னும் சிலவும்தான் நினைவில் வருகின்றன. நாறுவது தன் தலைதான் என்று தெரியாமல் அயலில் நாற்றத்தைத் தேடும் இறால்களாகவே நாம் இருப்பதைத் தான் இது காட்டுகிறது. இலங்கைப் பெண்கள் என்றால் உலகின் முதலாம் பிரமரில் தொடங்கி இன்றைய களமாடும் பெண்கள் வரைதான் எங்களால் நினைக்க முடிகிறது. சமூகக் குறிகாட்டியும் பெண்களுக்கான சம கல்வி மற்றும் வேலை வாய்ப்பு உயர்ந்த எழுத்தறிவுத்தரம் என உச்சத்திலேயே அவர்களை வைத்திருக்கிறது. ஆனால் உண்மை நிலைமை எதிர்மாறாகத்தானிருக்கிறது. ஒவ்வொரு வருடமும் கிட்டத்தட்ட பதினான்கு பதினைந்து வயதிற்குட்படும் விடலைப் பருவத்திலேயே பெண்பிள்ளைகள் மணம் முடிப்பது இங்கு அதிகரித்துக் கொண்டே போகின்றது. நாட்டில் யாவுமாய் நிற்கும் போரே இதற்கும் தாயாய் இருக்கிறது. வடக்கு கிழக்கு பிரதேசங்களில் இடையீறின்றித் தொடரும் போரும்

இடப் பெயர்வுகளும் இதற்கான துணைக் காரணிகளாகின்றன. தொடரும் இடப்பெயர்வினால் மாணவர்கள் பாடசாலைகளிலிருந்து இடைவிலகுகின்றார்கள். இப்படி இடைவிலகும் பிள்ளைகளை என்ன செய்வது என் குழப்பத்தில் இருக்கும் பெற்றோர் சரிவர தீர்மானிக்க முடியாமல் இருக்கிறது. ஏதேனும் தொழிற்கல்வியைப் புகட்ட வேண்டும் என்றால் அதற்கான அணுகு முறையில் தவறுகிறார்கள். அதிலும் பெண் பிள்ளையென்றால் அவளுக்குத் தொழில் ஒரு அத்தியாவசியத் தேவையாக அவர்கள் கருதுவதில்லை. இங்கேதான் திருமணம் முந்திரிக் கொட்டையாய் தலை நீட்டுகிறது.

இதற்கு அகதி முகாம் வாழ்க்கையும் முதன்மைக் காரணியாகிறது. அகதிமுகாம் வாழ்வின் ஏனைய அவலங்களுக்கிடையே போதுமான சமூகச் சீர்கேடுகளும் தலைதூக்குகின்றன. காற்றுப்புகாத பொழுது போக்குகள் அற்ற அந்த நெருக்கமான அகதிமுகாம் வாழ்வில் காதல் பதிலீடாகிறது. அத்தகைய காதலில் ஏடாகூடங்கள் ஏற்பட்டு விடக் கூடாது என்பதில் அவசர கல்யாணங்கள் நடந்தேறுகின்றன. அகதிமுகாமுக்கு வெளியேயும் இளம்பராயத் திருமணங்களைத் தூண்டும் ஆயிரம் காரணங்கள் இருக்கின்றன. பலவகையான ஆயுதக்குழுக்களின் நடமாட்டமும் அவர்களின் பலாத்கார ஆட்சேர்ப்பு முறைகளும் இளவயதுத் திருமணங்களுக்கு மற்றுமொரு பிரதான காரணமாகின்றன. இளைஞனாய் இருப்பதைவிட கணவனாய் இருப்பதில் பாதுகாப்பு அதிகம் என நம்பிச் செய்யப்படும் கலியாணங்களும் ஏராளம். இதில் இளம் பெண்கள் மட்டுமன்றி ஆண்களும் பாதிக்கப்படுகிறார்கள். பதினெட்டு பத்தொன்பது என்று திருமண வாழ்க்கைக்கான முதிர்ச்சியைப் பெற முன்னமே ஆண் பிள்ளைகள் கல்யாணம் முடிப்பதைக் காணலாம். காலம் ஆக ஆக இதுவே ஒரு பாரம்பரியமாக உருவாவதையும் பார்க்கின்றோம். இப்பொழுதெல்லாம் தமிழ் பேசும் கிராமங்களில் பிள்ளைகளின் திருமண வயதெல்லை குறைந்து கொண்டே வருகின்றது.



இளவயதுத் திருமணங்களினால்

பிள்ளைகளின் கல்வி தடைப்படுகிறது. அவர்கள் தங்கள் வாழ்க்கையை சரிவரக் கொண்டு நடத்தத் தேவையான தொழிற் கல்வியைப் பெறுவதில்லை. கல்யாணம் முடித்தவுடன் குடும்பத்தைக் காப்பாற்றுவதற்காக கூலி வேலைகளில் ஈடுபடுகிறார்கள். திருமண வாழ்க்கைக்குரிய முதிர்ச்சி இல்லாததால் இவ்வகையான தம்பதிகள் அதிகளவில் சண்டை சச்சரவுகளில் ஈடுபடுவதைக் காணலாம். பெரும்பாலான குடும்பங்கள் பல இதனால் முறிகின்றன. குடும்ப முறிவும், கணவன்மார் இளம் வயதில் கடத்தப்பட்டும், காணாமல் போயும், கொல்லப்பட்டும் தனித்த தாய்மார் ஏராளம். இதனால் இள வயதிலேயே தனித்து தனது குழந் தைகளைப் பாரமேற்க பெண் பிள்ளை தள்ளப்படுகிறாள். இவற் றின் அனியாயங்களை நாம் இன்னும் புரிந்து கொள்ளவில்லை. அறிவைத் தேடி தொழிலையும் வாழ்வையும் ஸ்திரப்படுத்திக் கொள்ள வேண்டிய வயதில் பிள்ளைகளைச் சுமக்கும் தாய்மார். அவசரக் கலியாணத்தில் அவதியுறும் அடுத்த சந்ததி. ஆக்கபூர்வமான மனித வளங்களை இழக்கும் எங்கள் சமூகம். இவை எல்லாவற்றுக்கும் மேலாக எங்கள் சமூகத்தின் ஒட்டு மொத்தமான கல்வி நிலையின் அதளபாதாள வீழ்ச்சியில் நாம் இருக்கின்றோம். எனவே இந்தப் போக்கை மாற்றுவதற்கான சகல முயற்சிகளிலும் இறங்க வேண்டிய கடமை எமக்குள்ளது.

முதலாவதாக திருமணம் பற்றிய எங்கள் சமூகப் பார்வையை மாற்ற வேண்டும். அதுவும் ஒரு பெண் பிள்ளைக்கு திருமணம்



அத்தியாவசியமான ஒன்றாகவே எம்மால் கருதப்படுகிறது. வாழ வைத்தல் வாழ்க்கை கொடுத்தல் என நாம் பாவிக்கும் சொற்கள் திருமணம் இல்லாத பெண்ணை வாழா வெட்டியாக பார்க்கவே எம்மை எண்ணத்தூண்டுகிறது. திருமணம் இல்லாமலும் ஒரு பெண் நிறைந்த வாழ்க்கை வாழலாம் பெண்ணுக்கு திருமணம் மட்டுமே வாழ்க்கையல்ல என்கின்ற விழிப்புணர்வு நம்மத்தியில் ஏற்படவேண்டும். இதைத் தவிர பெண் பிள்ளைகளுக்கு (ஏன் ஆண் பிள்ளைகளுக்கும்தான்) தொழிற்கல்வியின் முக்கியத்துவம் தெரியப்படுத்தப்படவேண்டும். ஏதாவது ஒரு தொழிலில் நாம் ஊன்றி நிற்கும்போது வாழ்க்கையை சுதந்திரமாக அனுபவிக்கலாம். சமூகத்துக்கும் பயனுள்ள பிரஜையாக இருக்கலாம். தொழிலைச் செய்வதற்கு நாம் வெளியுலகில் காலடி எடுத்து வைக்கும்போது பலதரப்பட்ட மனிதர்களுடன் பழகும் சந்தர்ப்பங்கள் கிடைக்கின்றன. இதனால் நாம் பெறக்கூடிய அறிவோ ஒரு கோடி பெறும். பரந்த மட்டங்களில் எங்கள் நாட்டில் தொழிற்கல்வி பெறக்கூடிய வாய்ப்புக்களை எங்கெங்கே தேடிப்போகலாம் என்கின்ற அறிவினைப் புகட்ட வேண்டும். ஆனால் இங்கு ஒரு பிரச்சினை உண்டு. தொழில் என்று வந்துவிட்டாலும் பெண்களுக்கென்று சில எல்லைகள் உருவாக்கப்பட்டுள்ளன. வீட்டுக்கு அருகாமையில் அல்லது குடும்பத்தோடு



பார்க்கும் தொழில்களைத்தான் பெண்களுக்குத் தேர்ந்தெடுப்பார்கள். இதனால் பொதுவாக கோழி வளர்ப்பு, தையல் போன்ற அதிகமாக வருவாய் தராத அடிமட்ட தொழில்களையே திரும்பத் திரும்ப செய்ய முனைகின்றனர். ஒரு மெக்கானிக்காகவோ, மேசனாகவோ ஒரு எலக்ரிசனாகவோ வேலை பார்க்க பெண்கள் வெட்கப்படுகின்றனர். இது யாருக்கும் உதவாத கண்ணோட்டமாகும். எந்த வேலையையும் பார்க்கக்கூடிய கெட்டித்தனம் அவர்களுக்கு இருக்கின்றது. இதை எத்தனையோ பெண்கள் நிரூபித்தும் இருக்கிறார்கள். இந்நிலையில் வருமானம் ஈட்டக்கூடிய புதிய பாரம்பரியமற்ற தொழில்களுக்கு பெண்களை ஊக்கப்படுத்த வேண்டும்.

இந்த நடவடிக்கைகள் தவிர இள வயதுப் பிள்ளைகளுக்கான ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை ஏற்பாடு செய்யக்கூடிய கழகங்களை நம்மத்தியில் உருவாக்கவேண்டும். ஒரு அகதி முகாமாக இருந்தாலும் அங்கு வாசிகசாலையொன்று நிச்சயம் வேண்டும். அதை மக்களே கேட்டு வாங்கிப் பெறவேண்டும். அதைத் தவிர விளையாட்டு அப்பியாசங்களை இயலுமான வகையில் ஒழுங்கு செய்யலாம். டிவிசன் மட்டத்தில் இருக்கின்ற விளையாட்டு உத்தியோகத்தர்களுடன் தொடர்பு கொண்டு கிரமமாகப் போட்டிகள் வைத்தல் போன்ற விருத்தியான நடவடிக்கைகளில் பிள்ளைகளை ஈடுபடவைக்கலாம். சிரமதானப் பணி அரசு சாரா அமைப்புக்களுடன் இணைந்து தொண்டராகப் பணி புரிவது போன்ற நடவடிக்கைகளில் இளம்பிள்ளைகளைக் கட்டாயமாக ஈடுபடவைக்கவேண்டும். இதனால் தங்கள் வருங்காலத்துக்குத் தேவையான அருமையான அனுபவ அறிவினை அவர்கள் பெற்றுக் கொள்ள முடியும். அத்துடன சேவையுணர்வும் அவர்களிடையே மேலோங்கி வளரும். இப்படிப் பொறுப்பான காரியங்களில் பொழுதைப்போக்கும் பிள்ளைகளுக்கு காதல் கடிதம் எழுத பொழுதேது?

இந்த முறை மாரச் 8 வருகின்ற சர்வதேசப் பெண்கள் தினத்தின் விடயப்பொருளாக இளவயதுத் திருமணங்களைத் தடுப்பதை எடுத்துக் கொள்ளுவோம். இந்த வருடம் முழுவதும் நாம் கூட்டாக இப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கான முயற்சிகளை சகல மட்டங்களிலும் எடுப்போம். அபிவிருத்திப் பணிகள் செயற்படுத்துகின்ற அரச நிறுவனங்கள் சமூக நிறுவனங்கள் கிராமச் சங்கங்கள் எல்லோரும் இணைந்து செயற்பட்டால் நிச்சயமாக மக்கள் மத்தியில் இப்பிரச்சினை பற்றிய விழிப்புணர்வினை ஏற்படுத்தலாம்.

அனுஷா



# SMS.கொம்



அழகிய கண்கள், பேரெழிலான தோர் உடல், அறிவின் கூர்மை, மயக்கும் புன்னகை... போதும் என்னைப் பற்றிய விடயங்கள் என்று நினைக்கின்றேன்... அதுசரி நீங்கள் எப்படி இருக்கின்றீர்கள்?

நீங்கள் ஏதாவது ஒரு அறையினுள் சென்றுவிட்டு ஏன் அதற்குள் நுழைந்தோம் என யோசித்ததுண்டா? அட என்ன ஆச்சரியம்! அப்படித்தான் எல்லா நாய்களும் யோசிக்கின்றன.

உண்மைக் காதல் ஒரு தலையணை போல
சிக்கலின்போது கட்டியணைக்கலாம்,அழுகையின்போது தலைசாய்க்கலாம்,ஆனந்த வேளையில் துணைக்கு அழைக்கலாம்
உண்மைக் காதலை அறிய ஆசையா?
ஒருதலையணைவாங்குங்கள்

உங்களுக்கு ஒரு செய்தி தெரியுமா? மூன்று குரங்குகள் மிருகக்காட்சிசாலையில் இருந்து தப்பிவிட்டன. முதலாவது குரங்கை தொலைக்காட்சி பார்த்துக்கொண்டிருந்த போது பிடித்து விட்டனர். மற்றுமொரு குரங்கை மைதானத்தில் விளையாடும்போது பிடித்துவிட்டனர். இதை வாசித்துக் கொண்டிருகிற மூன்றாவது குரங்கே நீயும் பிடிபடலாம்அவதானமாக இரு.

ஒரு நாளைக்கு ஒருவரை மட்டுமே என்னால் மகிழ்ச்சியாக வைத்துக் கொள்ள முடியும். மன்னித்துக் கொள்ளுங்கள் இன்று உங்களுக்கான நாள் அல்ல. நாளைய நாள் பற்றி சிந்திக்கலாம்



பாம்புகளில் சில பாம்புகள் மட்டும் நச்சுத்தன்மை கொண்டவை. பெரும்பாலான பாம்புகள் நச்சுத்தன்மை அற்றவை. அவை கடித்தால் தடிப்பு, சொறி, உடல் வீக்கம் ஏற்படும். உயிருக்கு எவ்வித பாதிப்பும் ஏற்படாது. விரியன் பாம்புகள் மிகவும் கொடிய நஞ்சைக் கொண்டவை. கடித்த சில மணித்துளிகளிலே உயிரைக் குடிக்கும் தன்மை உடையன.

பாம்புகள் பெரும்பாலும் இருட்டிய பிறகே இரைதேடப் புறப்படுகின்றன. எலி, தவளை, சிறு சிறு பூச்சிகள், பறவைகளின் முட்டைகள் ஆகியவற்றை உணவாகக் கொள்கின்றன. சில பாம்புகள் மற்றவகைப் பாம்புகளையே உண்ணக்கூடியவை. பாம்புகளில் மிகவும் எடையும் வலுவும், நீளமும் கொண்டவை மலைப்பாம்புகள்.

பாம்புகள் அந்தந்த இனங்களிலேயே தங்களுக்கு இணைகளைத் தேடிக் கொள்கின்றன. முட்டையிட்டு அடைகாக்கும் தன்மை கொண்டன. பெரும் பாலும் ஆண் பாம்புகளே அடை காக்கின்றன. இடத்திற்கும், தட்பவெப்ப நிலைக்கும் ஏற்ப பாம்புகள் வெண்மை, மஞ்சள், கருமை, நீலம், பச்சை, சிவப்பு, பழுப்பு மற்றும் பல வண்ணங்களில் மணமும் பல வகையாக உள்ளன.

பாம்புகளுக்கு காதுகள் கிடையாது, பாம்பின் கால் பாம்பறியும். கட்செவி போன்றவை பாம்பைப் பற்றி ஆராய்ச்சி அறிவு இல்லாத காலத்தில் கூறப்பட்டவையாகும். பாம்பாட்டி மகுடியை அப்படியும்



இப்படியும் அசைத்து ஆட்டும் போது பாம்பும் தன் பார்வையை மகுடி மீது செலுத்தி அதற்கேற்றவாறு அசைவதைத்தான் “மகுடியின் இசையில் தான் பாம்பு ஆடுகிறது” என்று தவறாகக் கூறுவார்கள்.

பாம்பு தன் அடி வயிற்றிலுள்ள செதில்கள் போன்ற அமைப்பு மூலம் தரையைப் பற்றி (மண்புழு போன்றே) முன்னுக்கு நகர்கிறது. மண்புழுவிற்கு முன் பக்கம் மட்டுமே அந்த அமைப்பு உள்ளது. இதனால் தான் மிக வேகமாக நகர முடிகிறது.

பாம்புகளுக்கு அதிர்வுகளை உணரும் திறன் உண்டு. மனிதனோ, விலங்கோ, நெருங்கும் போது, நிலத்தில் ஏற்படும் அதிர்வலைகளைப் பாம்புகள் தங்கள் வயிற்றுப்புற செதில்கள் மூலம் உணர்ந்து அதற்கு ஏற்றவாறு தன் திசையை மாற்றி அவைகளிடமிருந்து தப்பித்துக் கொள்ளும்.


பாம்புகளுக்கு நாக்கு பிளவுபட்டு கம்பிகள் போல் இருக்கும். எனவே, பாம்பு பாலையோ நீரையோ நக்கிக் குடித்திட முடியாது. கிண்ணத்தில் பாலை வைத்தால் பாம்பு உறிஞ்சிக் குடிக்கிறது என்று பக்தர்கள் கூறுவார்கள். இது மிகவும் அறியாமையாகும். பாம்புக்கு அதன் தலையின் நுனிப்பகுதியில் மூக்கு உள்ளது. அது நீர்மப் பொருளில் வாயை வைக்கும் போது முதலில் நுழைவது மூக்காகத்தான் இருக்கும். மூக்கை நீரிலோ. பாலிலோ நுழைத்தாலே பாம்பு மூச்சுத்திணறிச் செத்து



விடும். இதை அறியாதோர்தான் பாம்பு பால் குடிக்கிறது என்று தவறாகச் சொல்லி வருகின்றனர்.

மேலும், முட்டையைக் கூட உடைத்து உறிஞ்சிக் குடிப்பதாகவும் பக்தர்கள் சரடு விடுகிறார்கள். பாம்பு எலி, தவளை போன்றவற்றை அப்படியே விழுங்குமேயன்றி மென்று சாப்பிடக் கூடிய அமைப்பு கிடையாது. எனவே முட்டையையும் பாம்பு விழுங்கிறதேயன்றி உடைத்து உறிஞ்சிக் குடிக்காது.

பாம்புகள் அதன் இனத்திலேயே இணைந்து இனப்பெருக்கம் செய்கின்றன. ஆனால், நல்ல பாம்பும், சாரைப்பாம்பும் தான் இணைகின்றன என்ற தவறான கருத்தினைக் கூறி வருகின்றார்கள். பறக்கக் கூடிய பறவைகள் எல்லாம் ஒரே இனத்தைச் சேர்ந்திருப்பதால் கோழி, கொக்குடன் இணையுமா? கழுகு வெளவாலுடன் இணையுமா? காக்கை குயிலுடன் இணையுமா? குருவி கரிச்சலுடன் இணையுமா? வாத்துவான் கோழிடன் இணையுமா? இவை எப்படி சாத்தியமில்லையோ அப்படித்தான் பாம்பின் சேர்க்கையும் ஆகும்.



**இ. அனுஜா**


ஒரு பொல்லாப்புமில்லை

# இருக்கிறம்

மாதம் இருமுறை

காத்திருப்பு 03 - இருக்கை 04

ஈகோ பப்ளிசிங் ஹவுஸ் பிரைவேட் லிமிட்டட்டால் வெளியிடப்படுகிறது.



#3, டொரிங்டன் அவனியூ, கொழும்பு 07.
தொலைபேசி: +94 60 2150836 +94 11 2506272
தொலைநகல் +94 11 2585190
மின்னஞ்சல் irukkiram@gmail.com



**ஸ்தாபக ஆசிரியர் :**
இளையதம்பி தயானந்தா

**நிர்வாக ஆசிரியர் /ஆசிரியர் :**
சாந்தி சச்சிதானந்தம்

**இணை ஆசிரியர் :**
அருளானந்தம் சஞ்ஜீத்

**ஆசிரியர் குழு :**
க. பிரணவன்
பஸ்லான் மொஹமட்

**கௌரவ ஓவியர் :**
ஆசை இராசையா

**ஓவியர் :**
சஞ்ஜீத்

**முதன்மை வடிவமைப்பு :**
முஜீன்நாத்

**வடிவமைப்பு :**
க. பிரணவன்
சோ.விபுலன்

**புகைப்படம் :**
பா.கரன்
சோ.விபுலன்

**கணனி தட்டச்சு :**
எஸ். சதீஸ்

கதைகளில் வரும் பெயர்களும் நிகழ்ச்சிகளும் கற்பனையே. இதழில் விளம்பரங்களின் உண்மைத்தன்மைக்கு நாம் பொறுப்பல்ல

# இதுக்கு என்ன சொல்லுறீங்க..?



ஒரு மீற்றிங்ல அமெரிக்கன், ரஷ்யன் இலங்கையன் என மூன்றுபேர் கலந்து கொண்டிருக்கினம். இடைவேளை டைமுக்கு மூன்றுபேரும் ஒண்டா சந்திச்சு கதைச்சுக் கொண்டிருக்கேக்க அமெரிக்கன் சொன்னான்.. எங்கட நாட்டில ஒருத்தனிண்ட கிட்னியை எடுத்து இன்னொருத்தனுக்கு வைப்பம். அவன் 2 மாசத்துல வேலை செய்ய ஆரம்பிச்சுடுவான்...!

அதை ஆச்சரியமா கேட்டுக்கொண்டிருந்த ரஷ்யன் சொன்னான்.. எங்கட நாட்டுல ஒருத்தன்ட பாதி ஈரலை எடுத்து இன்னொருத்தனுக்கு வைப்பம்.. ரெண்டு பேருமே ஒரு மாசத்திலே வேலை செய்ய ஆரம்பிச்சுடுவாங்க தெரியுமா?


இதையெல்லாம் பொறுமையா கேட்டுக்கொண்டிருந்த நம்மட ஆள் சொன்னான் ஓ.. இதெல்லாம் என்ன? நாங்க ஒண்டுக்குமே ஆகாத ஒருத்தனை தூக்கி பார்லிமெண்ட்ல வைப்பம். உடனே மொத்த நாடும் அவன் சொல்றபடி வேலை செய்ய ஆரம்பிச்சுடும்! இதுக்கு என்ன சொல்லுறீங்க..? ஹி..ஹி..

பித்தன்

# மலேசிய தமிழர் வாழ்வும்

தென்கிழக்காசிய நாடுகளுக்கு தமிழர் வரவும் கலாசாரப்பரவலும் இராஜேந்திர சோழனின் படையெடுப்பிலிருந்தே தொடங்கியதென ஆய்வாளர்கள் குறிப்பிடுகின்றனர். கடாரம், லங்கா சுக்கா, பூஜாங் பள்ளத்தாக்கு முதலிய பெயர்களும் இடங்களும் தமிழர்கள் மலேசியாவில் கால் ஊன்றியதை பறைசாற்றுகின்றன. இவர்களுடைய வருகைக்கு முன்னரோ அல்லது சமகாலத்திலோ மகாபாரதம், இராமாயணக்காப்பியங்கள் மற்றும் பௌத்த, இந்துமத சாரங்கள் இப்பகுதியில் பரவலாக அறியப்பட்ட ஒன்றாகவே இருந்துள்ளன. ஆனால் இந்தப்பகுதி மக்களின் வாழ்வியலில் இடம்பெற்ற இந்திய மற்றும் தமிழ்க்கலாசாரக்கூறுகள் காலஓட்டத்தில் நிலைபெறாமல் போய்விட்டன.

சோழப்பேரரசின் ஆட்சியில் அமைக்கப்பட்ட "லங்காசுக்கா" அரசு தமிழ் அரசர்களால் ஆளப்படவில்லை. எனவே மெல்ல மெல்ல தமிழரின் சுவடுகள் அழியலாயின. ஆனால் மலாக்கா பேரரசு அமைந்தபோது மீண்டும் தமிழரின் செல்வாக்கு ஓங்கத்தொடங்கிற்று. வரலாற்றுக் கண்டுபிடிப்புகள் எவ்வாறு இருந்தாலும் "சிஜாரா மெலாயு" என்ற காப்பியத்தில் தமிழர்கள் பற்றிய செய்திகள் நிறையவே உள்ளன. தமிழ் நாட்டைச் சேர்ந்த மணிப்



# வாழ்வியலும்

புரிந்தன் என்ற சிற்றரசனின் மகளை, மலாக்கா மன்னர்களில் பரமேஸ்வர னுக்கு அடுத்து வந்த மன்னன் மணந் துள்ளான் என்ற குறிப்பும் உள்ளது. அவளுக்கு பிறந்த மகனே தன்னு டைய மாமன் துன் அலியின் உதவி யுடன் பட்டத்துக்கு வந்த 'முஜபர் ஷா' என்றும் அதற்குப்பின்னர் ஆட் சிக்கு வந்த அனைவருமே இவரு டைய வழித்தோன்றல்கள் என்ற குறிப்பும் இக்காப்பியத்தில் இடம் பெற்றுள்ளது.

அதே வேளை மலாக்கா முதல மைச்சர்களிலே துன்பேராவிற்கு அடுத்து மிகவும் புகழ்பெற்று விளங் கிய துன்முத்தாயீர் ஒரு தமிழர் என் றும் கூறுவர். பின்னர் மலாக்கா போர்த்துக்கீசர் கைகளில் விழுவ தற்கும் " ராஜா மென்டாலியார்" , " ராஜா கித்துள்" என்ற இரு தமிழ் வணிகர்களே காரணம். என்ற குற்றச் சாட்டும் உண்டு. இதன் மூலம் பார்க் கும் போது மலாக்கா மன்னர்களின் ஆட்சியின் போது தமிழர்களின் செல்வாக்கும் புகழும் மிக உயர்ந்த நிலையில் இருந்ததுடன் பொருளா தார ரீதியாக சிறப்புடன் வாழ்ந் துள்ளனர் என அறிய முடிகின்றது.

இறப்பர் தொழில் வியா பார ரீதியாக அறிமுகமாகத் தொடங்கியதும் ஆங்கிலே யர்கள் "கங்காணி" முறை யில் தமிழ்நாட்டிலிருந்து தொழிலாளர்களைக் கொண்டுவரத் தொடங் கினர்.


இங்கு தமிழர்கள் காட்டை அழித்து இற ப்பர் பயிர் வளர்ச்சி க்கு மட்டும் உதவவி ல்லை. மாறாக மலே




சியாவின் பொருளாதார வளர்ச்சிக்கு முக்கியமான தொடர்புத்துறையிலும் தமது பங்கினை வழங்கும் பொருட்டு பாதை அமைப்பதிலும் ரயில் தண்டவாளங்களை அமைப்பதிலும் தொலைத் தொடர்பு சாதனங்கள், மின்சார இணைப்புகள் அமைப்பதிலும் தங்களுடைய உழைப்பை வழங்கினார்கள்.

நகர்ப்புற சுற்றுச்சூழலுக்கு தூய்மையை கொடுப்பதற்காக துப்புரவு தொழிலாளர்களாகவும் நகர்ப்புறங்களில் குடிவைக்கப்பட்டனர். வரலாற்றிலே உச்சத்தில் இருந்த தமிழர்கள் மலேசியாவில் பெரும் எண்ணிக்கையில் சாதாரண உடல் உழைப்பு வர்க்கமாக அடையாளப்படுத்தப்பட்டனர். தோட்டப்புறங்களிலும் நகர்ப்புறத்தில் மோசமான குடியிருப்புகளிலும் அவர்கள் ஒரு வகையில் சிறைப்பட்டிருந்தனர் என்பது உண்மையாகும். ஆனால், மிகவும் வசதி குறைந்த நிலையில் வாழ்ந்த அந்த தமிழர்கள் தங்களது பண்பாடுகள் , நம்பிக்கைகள் பழக்கவழக்கங்கள் முதலியவற்றை மறக்கவில்லை.

கோவில்களை மையமாகக் கொண்டு பண்பாட்டு நிகழ்வுகளை அரங்கேற்றினர். தமிழ்மொழிக்கும் இலக்கியத்துக்கும் முக்கியத்துவம் கொடுத்தனர். பட்டப்படிப்புகளோ சான்றிதழ்களோ இல்லாத ஆசிரியர்கள் தமிழ் மொழியையும் இலக்கியத்தையும் போதித்தனர். கோலாட்டம், பொம்மலாட்டம், பொய்க்கால்குதிரை, கூத்து, காலட்சேபம் என்று நமது பாரம்பரிய கலைகளை போற்றினர். தற்காப்புக் கலைகளையும் போதித்து சிலம்பாட்டம், வர்மக்கலை என்று தமது கலைகள் அற்றுப்போகாமல் பார்த்துக் கொண்டனர். இத்தோட்டப்புற சாதாரண தமிழர்கள் தமது அடையாளங்களை இம்மண்ணில் வேர்விட்டு வளரச் செய்தனர்.





துண்டாடல்களும் " பிரஜா உரிமை" பிரச்சினைகளும் சிவப்பு அடையாளகார்ட் பிரச்சினைகளும்" வேலைபேமிற்" ஏற்படுத்திய சவால்களையும் கண்டு இந்தச் சமூகம் துவண்டு விடவில்லை. தனது பண்பாட்டினையும் கலாசாரத்தினையும் தமது அடையாளங்கள் என்று உணர்ந்து செயற்பட்டனர். தனிமனிதர்களும் இயக்கங்களும் தமிழ்ச்சமுதாயத்தின் நிலைப்பாட்டை மலேசிய மண்ணில் நிலைநிறுத்திக் கொள்வது மிகவும் அவசியம் என்று உணர்ந்து செயல்பட்டனர்.


தமிழரின் வரலாறும் வாழ்வும் அங்கு பதிவு செய்யப்படவேண்டும். தமிழரின் பாரம்பரிய கலைகள் பற்றிய செய்திகளும் பயிற்சிகளும் இம்மையத்தில் வழங்கப்பட வேண்டும். நாள் தோறும் மொழியில் ஏற்படும் மாற்றங்களும் இலக்கியங்களில் மாறி வரும் போக்குகளையும் இங்கு ஆய்வு செய்ய வேண்டும்.

தமிழன் என்ற இனம் மலேசியா மண்ணில் ஆழமாக விழுதுவிட்டு கிளை பரப்ப உறுதியான செயல் திட்டங்களை கண்டு செயலாக்கி நமது தமிழ்ச்சமூகத்தின் அடையாளத்தை நிறைபெறச்செய்ய வேண்டும்.

கி.லஷ்மன் சிசில்








# அபா

## வெற்றியின் இரகசியம்

சிவன்



**கி.மு 5ம்** நூற்றாண்டில் வாழ்ந்ததாக சிங்கள இதிகாசங்களில் கூறப்படும் பண்டுகாபய மன்னனின் கதையை அடிப்படையாக வைத்து படைக்கப்பட்டிருக்கும் ஒரு சிங்களத் திரைப்படம் அபா. இத் திரைப்படம் 50 பிரதிகள் எடுக்கப்பட்டு ஏககாலத்தில் தென்னிலங்கையின் மூலை முடுக்குகளெங்கும் காண்பிக்கப்பட்டது. அனைத்துத் திரையரங்குகளும் சிங்கள சினிமாப் பார்வையாளர்களினால் நிரம்பி வழிந்தது. வசூலில் மிகப்பெரிய சாதனை படைத்துள்ளதாகவும் கூறப்படுகிறது. இத் திரைப்படம் சிங்கள சாதாரண சினிமா இரசிகனை மட்டுமல்லாது திரையரங்குகளுக்குச் செல்லும் பழக்கத்தைக் கொண்டிராத பல சாதாரண சிங்கள மக்களையும் சினிமாத் திரையரங்குகளுக்கு வரவழைத்துள்ளது. இப்படத்தை 10 தடவைளுக்கு மேல் பார்த்துள்ள சிங்களச் சினிமா இரசிகர்களும் இருக்கின்றனர். வழமையாக ஹொலிவுட் திரைப்படங்களுக்காக திரையரங்குகளில் முண்டியடித்துக் கொள்கிற சிங்களச் சினிமா இரசிகர் கூட்டம் பல காலங்களின் பின் ஒரு சிங்களச்சினிமாவைப் பார்ப்பதற்காக அலைமோதுகிறதைப் பார்க்கின்ற போது விஜய் திரைப்பட இரசிகர் கூட்டம் கூடத் தோற்றுவிடும் போல் உள்ளது.


அபா திரைப்படமானது சிங்களத் திரைப்படத்துக்குரிய தனித்துவமென அம்சங்களில் சோடை போகாத வகையிலும் ஹொலிவுட் சினிமா இரசிகனையும் கவரும் விதத்திலும் படைக்கப்பட்டு என்றுமில்லாதவாறு பிரமாண்டமான வெற்றியை ஈட்டியுள்ளது. இந்த அபா திரைப்படத்தின் கதை என்ன? இதன் பிரமாண்ட வெற்றிக்குப் பின்னால் இருக்கும் காரணிகள் எவை?

அபா என்பது பண்டு காபய மன்னனின் இன்னொரு பெயராகும். வீட்டுப் பெயர் அல்லது சிறு வயதுப் பெயர் எனக் கூறலாம். கிறிஸ்துவுக்கு முன் 5 ஆம் நூற்றாண்டளவில் இலங்கையை இயக்கர் என்ற கோத்தினத்தார் ஆட்சி செய்து வந்ததாகவும் இக்கால பகுதியில் வட இந்தியாவில் இருந்து இலங்கையை



நோக்கி படையெடுத்து வந்த சிங்க வம்சத்தார் இலங்கையை கைப்பற்றி தமது ஆட்சியின் கீழ் கொண்டு வந்த தாகவும் சிங்கள இதிகாசங்களிலும் நாட்டார் கதைகளிலும் கூறப்படுகி றது.


ஆனால் இந்த முழு வரலாறும் அபா திரைப் படத்தில் முழுமை யாக உள்ளடக்கப்படவில்லை. அபாவின் திரைக்கதை எழுத்தாளர் மற்றும் இயக்குனர் ஜக்சன் அந்தனி ஒரு திரைப்படத்துக்கு ஏதுவான கால அளவை அல்லது பொருத்த மான காலப்பகுதியை இதிகாசக் கதையிலிருந்து தேர்ந்தெடுத்து அதை முழு வீரியத்தடன் சொல்ல முற்பட்டிருக்கிறார். பார்வையா ளன் சலிப்படையாத விதத்தில் வர லாற்றுக் கதைகளை முழுமையாக ஒரு திரைப்படத்தில் கூறுவது என் பது சவாலான விடயமாகும். ஜக்சன் அந்தனி அத்தகைய ஆபத்தான முயற்சியை தவிர்த்துக் கொண்டது அவரது சாதுரியத்தை எடுத்துக் காட்டுகிறது. பண்டுகாபய மன்ன னின் முழுக்கதையையும் மூன்று மணி நேரங்களில் சொல்ல முடி யாது எனப் பல சிங்களச் சினிமா ஆர்வலர்கள் கூறுகின்றனர். இக் கூற்று எவ்வளவு தூரம் சரியானது என்பது வேறு விடயம்.




திரைப்படத்தில் கதையானது அபாவின் (பண்டு காபய குமாரன்) பிறப்புடன் ஆரம்பிக்கிறது. அதன் பின் இதிகாசக் கதைகளில் கூறுவது போன்று குழந்தை இரகசியமான முறையில் கை மாற்றப்பட்டு வேறொரு இடத்தில் வளர்கிறான். அங்கு அவன் அபா என்னும் பெய ரில் அழைக்கப்படுகிறான். சிறந்த

அறிவாளியாகவும் வீரனாகவும் வளரும் பாலகன் அபா ஒரு கட்டத்தில் தனது தாய் சித்திராவை ஏதேச்சையாகச் சந்திக்க நேர்கிறது. அப்பொழுது அவன் தன்னையறியாது அம்மா என அழைக்கிறான். அதை அறிந்த அவனது மாமன்மார் சந்தேகம் கொண்டு அக்குழந்தையைத் தேடி அலைகின்றனர். எந்தக் குழந்தை தங்களது மருமகனாக இருப்பான் என சரியாக அடையாளம் காணாத நிலையில் அவர்கள் அபா வளர்ந்து வரும் தேசத்துக் குழந்தைகள் எல்லோரையும் கொன்று குவிக்கிறார்கள். ஆனால் அபா மட்டும் பல போராட்டங்களின் பின் ஒருவாறாக தப்பி விடுகிறான். தப்பி வரும் அபா தான் இழந்த இராச்சியத்தை எப்படியாவது கைப்பற்றுவேன் அதற்காக தான் வீரத்துடன் போரிடப் போவதாக சூளுரை செய்கிறான்.

இதற்கிடையில் பல சுவாரசியமான சம்பவங்கள் கதையில் நிகழ்கின்றன. அபா அக்கிராம வீரனுடன் சண்டையிட்டு வெல்வது அபாவின் திறமையையும் வீரத்தையும் அறிந்த இயக்கர் குல அரசன் அபாவை தங்களது மாயா வித்தை மூலம் கடத்திச் செல்வது போன்றவை இரசிகர்களை திரைப்படத்தை சுவாரசியம் இழக்கவிடாது பாதுகாக்கின்றன.



திரைப்படத்தின் கதையைப் பார்த்தால் அது சினிமா உலகுக்கு ஒன்றும் புதிய கதையல்ல. மேற்கிலும் சரி கிழக்கிலும் சரி இத்தகைய கதைகள் இதிகாசங்களாகவும் நவீன கதைகளாகவும் நிறையக் கூறப்பட்டுவிட்டன. அவற்றில் சில திரைப்படங்களாவும் பல வந்திருக்கின்றன. தென்னிந்திய சினிமாவிலும்






ஹொலிவுட் சினிமாக்களிலும் கூட இத்தகைய திரைப்படங்கள் ஏற்கனவே வந்துவிட்டன.

இத்திரைப்படம் சிங்கள இரசிகர்களினால் பிரமாண்டத் திரைப்படம் என்று வர்ணிக்கப்படுகிறது. சுமிந்தவீரசிங்கவின் நேர்த்தியானதும் பிரமிக்கவும் வைக்கக் கூடிய படிப்பிடிப்பு கி.மு 500ம் நூற்றாண்டு என்று நம்ப வைக்கக் கூடிய அரங்க வடிவமைப்புகள் சண்டைக் காட்சிகள் மற்றும் வீரசாகசங்கள் இத்திரைப்படத்தை பிரமாண்டம் என்ன சொல்லும்படி ஆக்குகின்றன.

புதிய தொழில் நுட்ப விடயங்கள் வேறெந்த சிங்களத் திரைப்படங்களிலும் பயன்படுத்தப்படாத அளவிற்கு அபாவில் பயன்படுத்தப்பட்டுள்ளன. குறிப்பாக ஒலி அமைப்பு மற்றும் திரை விம்பங்களின் அழகு மற்றும் நிறம் என்பவை நவீன தொழில் நுட்பத்தின் உதவியும் சிறப்பாக அமைக்கப்பட்டுள்ளன. இத்தகைய விடையங்கள் சிங்கள சினிமா இரசிகனுக்கு சிங்கள சினிமா மீது ஒரு புதிய நம்பிக்கையை ஏற்படுத்தியுள்ளது. மாற்று மொழியில் மிகப் பிரமாண்டமான ஒரு திரைப்படத்தைப் பார்ப்பதில் வரும் நிறைவை விட சொந்த மொழியில் தன் சமூகம் சார்ந்த கதையைக் கொண்ட ஓரளவான பிரமாண்டமான படம் பார்ப்பதில் வரும் நிறைவானது மிகவும் அதிகமானது. அத்தகைய நிறைவே சிங்கள சினிமா இரசிகனுக்கு அபா படம் மூலம் கிடைத்துள்ளது.

அது மட்டுமல்லாது நதிக்கருகேவின் இசை ரவீந்திரகுருகேவின் மிகச் சிறந்த படத்தொகுப்பு வசந்த விட்டாச்சியின் அவர்களின் அற்புதமான உயிரோட்டமுள்ள இயல்பான ஒப்பனை ஆகிய விடையங்கள் இப்படத்தின் வெற்றிக்குக் காரணமான ஏனைய விடையங்களாக உள்ளன.

மையப்பாத்திரமான பண்டுகாபய மன்னனின் 16 வயது வரையிலான நிகழ்வுகளே இப்படத்தில் காண்பிக்கப்படுகிறது. குறிப்பாக 16 வயது இளைஞன் அபாவே

(பாண்டு காபய குமாரன்) இப்படத்தின் மையப் பாத்திரமாகிறான். 12 வயது முதல் 16 வயது வரையான அபா பாத்திரத்தை நடித்திருப்பவர் ஜக்சன் அந்தனியின் மகன். இதன் மூலம் ஒரு புதிய ஹீரோ உருவாக்கப்பட்டுள்ளார்.



பண்டு காபய மன்னனின் கதை ஏற்கனவே சிங்கள மக்கள் மத்தியில் அறியப்பட்ட கதையாகவும் ஏற்கனவே பண்டு காபய ஒரு ஹீரோவாக பதியப்பட்டிருப்பதும் இத்திரைப்படத்தின் வெற்றிக்கு இன்னொரு காரணமாக அமையலாம். நாட்டார் கதைகளிலும் இதிகாசங்களிலும் பாடப்புத்தகங்களிலும் கேட்டறிந்த மிகவும் போற்றுதலுக்குரிய ஒரு நாயகனின் கதையை கட்புலனூடாக பார்க்க மக்கள் கண்டிப்பாக விரும்புவார்கள். ஏற்கனவே ஓரிரு இதிகாச அல்லது வரலாற்றுக் கதைகள் சிங்களத்தில் திரைப்படங்களாக வெளி வந்திருந்தாலும் பண்டு காபய மன்னனின் கதை திரைப்பட வடிவில் வருவது இதுவே முதல் முறையாகும். அதுவும் நீண்ட காலங்களின் பின் ஒரு வரலாற்றுக் கதை வந்திருக்கிறது. புதிய தொழில் நுட்ப வசதிகளைப் பயன்படுத்தி தயாரிக்கப்பட்டிருக்கும் பிரமாண்ட தயாரிப்பு என்னும் விளம்பரமும் மக்களின் ஆவலை மேலும் தூண்டுவதாக அமைந்து விட்டது. அந்த வகையில் இத்திரைப்படம் பற்றிய விளம்பரம் இத்திரைப்படத்தின் வெற்றியில் இன்னொரு முக்கிய பங்கை வகிக்கிறது.




எல்லாவற்றிற்க்கும் மேலாக இத்திரைப்படம் வெளிவந்திருக்கும் காலம் மிக முக்கியமானது. இந்த நாடு ஒரு பாரிய யுத்தத்தை நிகழ்த்திக் கொண்டிருக்கிறது. அதில் வெற்றி வாகைகளைச் சூட்டிவருவதாகவும்





பரவலாக நம்பப்பட்டு வருகிறது. பெரும்பாலான சிங்கள மக்கள் இந்த வெற்றிகளின் பங்காளிகளாக தங்களையும் அடையாளம் காணுவதில் ஒரு திருப்தியைக் காண்கின்றனர். இத்தகைய சூழலில் இத் திரைப் படம் வெளிவந்திருப்பது இத்திரைப் படம் பாரிய வெற்றியை அடைவதற்கு ஒரு காரணமாக அமைந்துள்ளது. இது இரு பக்க அனுகூலத்தை விளைவிப்பதாக அமைகிறது. சிங்கள பெரும்பான்மை மக்களின் மத்தியில் தற்சமயம் மேலோங்கி நிற்கும் வெற்றி, வீரம் போர் போன்ற மனப்போக்கு இத்திரைப்படத்தை பார்த்து மேலும் மகிழ்வடைவது ஒரு பக்கம் இருக்க இத்திரைப்படமானது போரின் மீதும் வெற்றிகளின் மீதும் சிங்கள மக்களுக்கு உள்ள நம்பிக்கையை வலுவடையச்செய்கிறது. வேறுவிதமாகக் கூறினால் இலங்கையில் உள்ள போர்ச் சூழலும் அரச படைகள் ஈட்டி வரும் வெற்றிகளும் இத்திரைப் படத்துக்கு சாதகமாக அமைந்துள்ள வேளையில் இத்திரைப்படமானது தனது பங்குக்கு போர் மீதும் இராணுவத் தீர்வுகள் மீதும் மக்களின் நம்பிக்கையை வலுவடையச்செய்கிறன.

இனவாதத்துக்கும் போருக்கும் எதிரான சிங்கள சினிமா மற்றும் அரசியல் ஆர்வலர்கள் இத்திரைப் படத்தை அரசியல் கண்ணோட்டத்தில் பார்க்கின்றனர். அவர்கள் இது போரைத் தூண்டுவதற்காவும் இன வாதத்தை மேலும் வலுவடையச் செய்யும் நோக்குடேனயே இத்திரைப்படம் படைக்கப்பட்டுள்ளது என்கின்றனர். இதிகாசக் கதையென்னும் போர்வையில் தற்கால அரசியல் சூழலில் நெருப்புக்கு எண்ணெய் ஊற்றுவதாக இத்திரைப்படம் அமைந்துள்ளது என்கின்றனர். இந்த நாட்டில் எத்தனையோ கதைகள் நிரம்பியிருக்கின்றன. சொல்வதற்



கும் படமாக்குவதற்கும் ஆயிரம் முக்கிய விடையங்கள் சம காலத்தில் நிகழ்ந்து கொண்டிருக்கிற பொழுது இத்திரைப்படத்தை இப்போது எடுக்க வேண்டிய தேவை என்ன என்ற கேள்வியை எழுப்புகின்றனர். இத்திரைப்படத்தின் முடிவில் ஜக்சன் கூற வரும் விடையம் என்ன என்பது கேள்விக் குறியாகவே உள்ளது.






அபா ஆற்றும் வீர உரையானது இத்திரைப்படத்தின் வெற்றியில் முக்கிய பங்கு வகிக்கிறது. திரையரங்குகளிலிருந்து வெளியே வரும் சிங்களப் பார்வையாளன் ஒவ்வொருவரதும் முகத்தில் தென்படும் பூரிப்புக்கும் திருப்திக்கும் தன்னம்பிக்கை மற்றும் பெருமிதத் தன்மைக்கும் அபாவின் கடைசி உரைதான் முக்கிய ஆணிவேராக அமைகிறதோ என எண்ண இடமுண்டு. இத்திரைப்படமானது இன்னொரு சூழலில் வெளிவந்திருந்தால் இவ்வளவு தூரம் வெற்றியளிதிருக்காது என்கின்றனர்.

உதாரணமாக போரினால் இத்தேசம் பல இளைஞர்களைப் பறிகொடுத்து முடவர்களாக்கி பொருளாதார ரீதியல் மிகவும் நலிவடைந்து பஞ்சமும் தரித்திரமும் இந்நாட்டில் தலைவிரித்தாடப் போகும் நிலையில் இத்திரைப்படம் வெளிவந்திருந்தால் சில வேளைகளில் திரையரங்குளில் ஈ கலைக்க வேண்டியே இருந்திருக்கும்.

எது எப்படியாயினும் அபா ஒரு வெற்றிகரச்சிங்களப் படம்

# அகிலாவின் அதிரடி டிப்ஸ்



சுறுசுறுப்பான காலை நேரம் மகளை பாடசாலையில் விட்டு வீடு திரும்பிக் கொண்டிருந்த அகிலாவின் காதுகளில் கல்பனாவின் வீட்டிலிருந்து வந்த சத்தம் அழைத்தது." ஏன் இப்படி இருக்கிறீங்க? ஒழுங்கா ஒரு மரக்கறி கூட வாங்கத் தெரியாமல் எல்லாம் முத்தலாகவும் வாடியும் கிடக்கு.....திடீரென அகிலா உள்ளே நுழைந்ததைப் பார்த்ததும் பாராதவர் போல் அந்தப் பக்கம் திரும்பிக் கொண்டு கணவனை முறைத்தாள். எனக்கு அவசர வேலை இருக்கு என்று அசடு வழிந்தபடி அவளது கணவன் அங்கிருந்து மெல்ல நழுவ இறுக்கத்தை உடைத்தபடி விஷயத்தைச் சொன்னாள். எல்லாவற்றையும் கேட்டு முடித்த அகிலா பக்குவமாய் விளங்கப்படுத்தினாள் "இந்தக் காலத்துக் கணவர்களில் உனது கணவர் வீட்டு வேலைகளில் உனக்கு எவ்வளவோ ஒத்தாசையாக இருப்பதை நினைத்து நீ பெருமைப்படு. சமையல் பிரச்சனையெல்லாம் பெரிசுபடுத்தாதே. முதலில் மரக்கறிகளை எப்படிப் பார்த்து வாங்க வேண்டு



மென்று சொல்கிறேன் கேள்விலை குறைவென்று வாடிய மரக்கறிகளை வாங்காமல் பச்சைப் பசேலென்ற மரக்கறிகளை வாங்கி சமைத்தால் ருசியும் சத்தும் எமக்கு கிடைக்கும்".

"முதலில் சமையலுக்கு முக்கிய மானது வெங்காயமே. அது இல்லை யென்றால் சமையலே இல்லை. வெங்காயத்தை அழுத்திப் பார்க்கும் போது சனுக்கென்று ஈரமில்லாமல் காய்ந்து இருக்க வேண்டும். வால் இருக்கும் வெங்காயத்தையும் வாங் காதீர்கள்".

வாழைப்பூ மிகவும் சுத்தமான மரக்கறி சிறுநீரகத்தில் உள்ள கற் களை வெளியேற்றி சுத்தப்படுத்தும் அதன் முதல் இதழை நீக்கிப் பார்த் தால் பூ உள்ளே கறுப்பாக தெரிந் தால் பழசு. காம்பில் பால் காயாமல் இருந்தால் புதுசு.

"பீட்ரூட் வாங்கும் போது மெல் லிய தோலுடன் பளபளவென்று கரு ஞ்சிவப்பாக திண்ணமாக இருக்க வேண்டும் சிவந்த கனமான தக்கா ளிப் பழங்களைப் பார்த்து வாங்க வேண்டும். கரட்டை வாங்கும் போது பளிச்சென்று ஓரேஞ் கலரில் இருக்கும் கரட்டை பார்த்து வாங்கு ங்கள் ஈர மண்ணோடு இருக்கி றதாவென மரவள்ளிக்கிழங்கைப் பார்த்து வாங்குங்கள். உருளைக்கிழ ங்கை வாங்கும் போது தோல் பள பளவென்று இருக்குமாறு பார்க்க வேண்டும். மேலே முளை உள்ளதா கவோ பச்சை நிறம் உள்ளதாகவோ இருக்கக் கூடாது. முருங்கக்காயை விரும்பாதவர்களே இல்லை. அவற்



றைப் பார்த்து வாங்குவது சுலபம். லேசாக நீளவாக்கில் முறக்கிவிட்டால் மீண்டும் விறைத்து பழைய நிலைக்கு வரவேண்டும். வெண்டிக்காயின் நுனியை வளைத்தால் வளையாமல் டக்கென்று ஒடிவதுதான் நல்ல வெண்டிக்காய்".

"நல்ல மரக்கறிகளை வாங்கி ருசியாக சமைத்துக் கொடுப்பது மட்டுமல்ல அவற்றில் என்னென்ன சத்துக்கள் இருக்கிறதென்பதையும் தெரிந்து கொள்ள வேண்டும். கத்தரிக்காய் வெண்டிக்காயில் நார்ச்சத்து போலிக்கமிலம் என்பன உண்டு. வாழைக்காயில் இரும்புச்சத்தும் அவரைக்காயில் புரதம், நல்ல கொழுப்பும், நார்ச்சத்து என்பன கிடைக்கிறது. தினமும் ஏதாவது ஒரு கீரையை சமையலில் சேர்த்தல் நல்லது. ஏனென்றால் கீரைகளில் எல்லாச் சத்துக்களும் அதாவது இரும்புச்சத்து கல்சியம், நார்ச்சத்து, தாது உப்புகள் இவை எல்லாமே அடங்கியிருக்கின்றன. உயிர் வாழ்வதற்காக மட்டும் சாப்பிடாமல் ஆரோக்கியத்திற்காகவும் சத்துள்ள, மரக்கறிகள், பழங்களைச்சாப்பிடுங்கள்".


"உணவு விஷயத்தில் கவனத்துடன் இருந்தால் நல்லது. பொரித்த உணவு வகைகளை கூடுமானவரை தவிர்த்து உடல் பருமனாவதை தடுக்கலாம். அதிகளவில் கோப்பி, தேநீர் அருந்துவது இனிப்பு வகைகளை சாப்பிடுவது போன்ற பழக்கங்களை பெண்கள் 40 வயதைக் கடக்கும் போதே தவிர்க்கலாம். கேட்கும் போதே பிரமிப்பாக இருந்தது கல்பனாவுக்கு, அவளிடமிருந்து புன்னகையோடு விடை பெற்றாள்






இருக்கும் இடத்தில் இருந்து கொண்டால்..!!
சர்வதேசத்தின் அழுத்தங்களுக்கு
ஒரு போதும் நாம்
அடிபணியப் போவதில்லை..!

# தென்னிலங்கையில்



# எந்தையும் தாயும்

ஜெயரஞ்சினி ஞானதாஸ்


**இலங்கையில் இன ஒடுக்குமுறையினாலும் யுத்தத்தினாலும் ஏற்பட்ட விளைவுகள் பல. யுத்தமானது தமிழ் மக்களின் அனைத்துத் தேவைகள் மீதும் பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது. உணவு உடை உறையுள் என்பனவும் பாதுகாப்பு (உயிர பொருள்) போன்ற விடயங்களும் போரினால் எவ்வாறு அவல நிலைக்கு உள்ளாக்கப்படுகின்றன என்பவையே பொதுவாகச் செய்திகளாகவும் கலைகள் மூலமாகவும் பேசப்பட்டு வருகின்றன.**

ஈழத்து நாடக வரலாற்றில் முக்கிய மானவரும் எல்லோராலும் அறியப் பட்டவருமான குழந்தை ம.சண்முக லிங்கம் பிரசித்திபெற்ற ஒரு நாடக எழுத்தாளரும் நாடக பயிற்றுவிப் பாளருமாவாரர. இவருடைய எழுத் துருவாக்கத்தில் உருவான எந்தை யும் தாயும் என்ற நாடகம் கடந்த ஜனவரி மாதம் 29ஆம் திகதியன்று கொழும்பு புஞ்சி அரங்கில் மக்கள் களரி அமைப்பினால் முன் அளிக் கையாக (review show) அளிக்கை செய்யப்பட்டது.

இது பொதுவான பார்வையாளர்க ளுக்கான அளிக்கையாக அமையாது தெரிவுக்குட்பட்ட குறிப்பிட்ட சில பார்வையாளருக்கான அளிக்கை யாக ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது.



இந்த அளிக்கையின் நோக்கம் அன்றைய சிறப்புப் பார்வையாளர்களின் கருத்துக்களையும் விமர்சனங்களையும் பெற்றுக் கொள்வதும் அதனூடாக ஆற்றுகையைச் செம்மைப் படுத்திக் கொள்வதுமேயாகும். மக்கள் களரி அமைப்பின் நிறுவனரான பராக்கிரம நிரியல்ல சிறந்த நாடக இயக்குனர். பல விருதுகள் பெற்ற திரைப்படப் படைப்பாளி. அவர் வடபுலத்துக்குரிய கதை ஒன்றை வடபுலத்து எழுத்தாளரினால் உருவாக்கப்பட்ட படைப்பை ஆற்றுகைப்படுத்தும் போது முதலில் அதனை விமர்சனத்துக்குட் படுத்த வேண்டும். அதனூடாக ஆற்றுகையை மேலும் செம்மைப்படுத்த வேண்டும் என்னும் நோக்கில் இத்தைகைய முன் அளிக்கையை ஏற்பாடு செய்தமை பாராட்டிற்குரியது. இது அவருடையதும் அவர் சார்ந்த மக்கள் களரி அமைப்பின் கலைஞர்களதும் பக்குவத்தை எடுத்துரைக்கிறது. எந்தையும் தாயும் என்ற நாடக எழுத்துருவாக்கமானது மிகவும் யதார்த்தமானது. யுத்த பூமியில் வாழும் தமிழ் மக்களின் வாழ்க்கை. நாம் அன்றாடம் பார்த்துணரக் கூடிய சம்பவங்களே இங்கு எழுத்துருவாக்கமாக படைக்கப்பட்டுள்ளது. 1992 இல் புலம்பெயர் மக்களின் தேவை நோக்கம் கருதி எழுதப்பட்ட இவ் எழுத்துருவாக்கமானது பேசும் விடயப் பொருள் பேசும் முறைமை பார்ப்போரிடையே அது ஏற்படுத்தக்கூடிய தாக்கவன்மை காரணமாக 1992 இலிருந்து இன்று





வரை வெவ்வேறுபட்ட இலக்குகளுடன் பார்ப்பவர்களை பலவித அரங்க வெளிகளில் வெவ்வேறு சமுகக் குழுமங்களில் பலவித அனுபவப் பகிர்வுகளோடு சந்தித்து வந்துள்ளது. இவற்றின் பின்னணியில் மக்கள் களரி அமைப்பினால் ஒரே அளிக்கை வெளியில் ஒரே நாடக எழுத்துருவாக்கத்தை இரு இனக் குழுமங்கள் ஒன்றன் பின் ஒன்றாக ஆற்றுகை செய்த அரங்க அனுபவத்தை நுகர முடிந்தது. ஒவ்வொரு அளிக்கையும் சவால் நிறைந்த அனுபவங்களாக வெளிப்பட வேண்டியது முக்கியமாகும். ஒரே எழுத்துருவாக்கம் வெவ்வேறு நெறியாளுகையில் வெவ்வேறு அனுபவத் திரட்டுக்களாக வெளிப்படும் போதுதான் நாடக பாடத்தின் பலவித வியாக்கியானிப்புகளை அறிந்து கொள்ள முடியும். இந்த வகையில் மக்கள் களரி அமைப்பானது ஒரு பரீட்சார்த்த முயற்சியாகக் குறித்த எழுத்துருவாக்கத்தை தமிழ்க் கலைஞர்கள் சிங்கள மொழியிலும் சிங்களக் கலைஞர்கள் தமிழ் மொழியிலும் அளிக்கை செய்திருந்தார்கள். சிங்களக் கலைஞர்களால் ஆற்றுகை செய்யப்பட்ட தமிழ் ஆற்றுகை எந்தையும் தாயும் எனும் பெயரிலும் தமிழ்க் கலைஞர்களினால் ஆற்றுகை செய்யப்பட்ட சிங்கள ஆற்றுகை துரு ஹிசின் நொனெகே தரிந்த (மலை உச்சிக்கு வர முடியாத நிலா) என்னும் பெயரிலும் தலைப்பிடப்பட்டிருந்தது. தமிழ் சிங்கள இரண்டு ஆற்றுகைகளுக்குமான மேடை விதானிப்பு ஒளியமைப்பு காட்சிகளின் இணைப்பாக்கம் என்பன யாவும் ஒரே மாதிரியாகவே அமைந்திருந்தமை இதன் சிறப்பம்சம்.

அரங்கம் முழுமையும் இருட்டாக்கப்பட்டுக் காட்சி ஆரம்பமாகிறது. பார்வையாளர்களை யுத்தச் சூழலுக்குள் இட்டுச் செல்லும் வகையில் நவீன தொழிநுட்ப வசதியின் உதவியுடன் கூடிய சற்று வித்தியாசமான ஆரம்பம். பார்வையாளரின் கவனத்தை முழுமையாக ஈர்ப்பதாக




அது அமைந்திருந்தது. பார்ப்போரின் கட்புல எல்லைக்குட்பட்ட மூன்று பக்கச் சுவர்களிலும் யுத்தக் காட்சிகள் துப்பாக்கி வேட்டுக்கள் விமானக் குண்டுகள் செல் வீச்சுக்களின் சத்தங்களுடன் கறுப்பு வெள்ளை நிறத்தில் திரையிடப்படுகிறது. போர்க் காட்சிகள் முடிவடைய எந்தையும் தாயும் மகிழ்ந்து குலாவி இருந்ததும் இந்நாடே.. என்னும் பாரதியின் வரிகள் இசைக்கப்படுகின்றது.

பாடல் முடிவடைய அரங்கின் மையப்பகுதியில் ஔ பிரகாசிக்கிறது. அங்கே ஒரு வயதானவர் (சங்கரப்பிள்ளை) கட்டிலில் போர்த்து மூடியபடி நீட்டிய கால்களுடன் படுத்திருக்கிறார். அங்கிருந்து ஔ மங்கலடைய அரங்கின் இடது புறத்தில் ஔ பிரகாசிக்கிறது. அங்கே ஐயாத்துரையையும் அவர பிள்ளைகளையும் நாம் காண்கிறோம். ஒளி பின்னர் அங்கிருந்து மங்கலாகி அரங்கின் வலது புறத்தில் பிரகாசிக்கிறது. அங்கே செல்வரட்ணத்தையும் அவர் மனைவியையும் காண்கிறோம். இம் மூன்று குடும்பங்களும் மூன்று வெவ்வேறு தனித்தனிக் குடும்பங்களாகவும் அதேநேரம் அவர்கள் ஒருவரோடொருவர் அன்றாடம் அன்னியோன்னியமாக உறவாடும் அயல் வீட்டு உறவுகள் எனவும் பார்ப்போர் புரிந்து கொள்ளும் விதத்தில் மேடை விதானிப்பும் ஒளியமைப்பும் மிகவும் நேர்த்த்யாகக் கையாளப்பட்டிருப்பது பாராட்டப்பட வேண்டியது. பாரப்போருக்கு ஆற்றுகை மீதான எதிர்பார்ப்பை இது தூண்டுவதாக அமைகிறது.

இதைத் தொடரந்து ஆற்றுகையானது சிறப்பான ஒளியமைப்பு மற்றும் கச்சிதமான அரங்க இணைப்பாக்கத்துடன் நகர்கிறது. கலைஞர்கள் அனைவரும் இவ் ஆற்றுகைக்காகக் கடும் பிரயத்தனம் எடுத்திருக்கிறார்கள் என்பது தெரிகிறது. குறிப்பாக சிங்களக் கலைஞர்களின் முயற்சி பாராட்டுக்குரியது. வட





புலத்துப் போர்க் கால அனுபவங்களைத் தமதாக்கிக் கொண்டு அவர்கள் ஆற்றுகைப்படுத்த முயற்சித்திருப்பது பாராட்டப்பட வேண்டியது. குறிப்பாக ஐயாத்துரை செல்வரட்ணம் செல்வரட்ணத்தின் மனைவி (சிங்களக் கலைஞர்களின் தமிழ் மொழிமூல அளிக்கையில்) பாத்திரங்களை ஏற்று நடித்திருந்த கலைஞர்களின் முயற்சி அவர்களின் பாத்திர உருவாக்கத்தில் நன்கு வெளிப்படுத்தப்பட்டுள்ளது. வேடவுடை விதானிப்பு மற்றும் ஒப்பனை என்பன அவர்களை ஒரு அசல் யாழ்ப்பாணத்து மத்தியதர வர்க்கக் குடும்பத்தவர்களாக முன் நிறுத்துகிறது. அவர்களது உடல் மொழி மற்றும் அரங்க இணைப்பாக்கத்துடன் கூடிய அசைவியக்கங்கள் உணர்ச்சி வெளிப்பாடுகள் என்பன ஆற்றுகையைச் செம்மைப்படுத்தியுள்ளன. ஐயாத்துரை பாத்திரத்தை ஏற்று நடித்தவரைக் குறிப்பிட்டுச் சொல்லியே ஆக வேண்டும். வெளிப்பார்வைக்கு வேடிக்கையான பேச்சும் மன ஆழத்தில் காத்திரமான மனப்பான்மையும் சுமுது (ஐயாத்துரை) அவர்களின் நடிப்பில் மிக இயல்பாக வெளிப்படுகின்றன. அலட்டிக் கொள்ளாத ஆர்ப்பரிக்காத பேச்சும் அடக்கமான நேரத்தியான உடல் மொழியும் இரசிக்கும்படியாக உள்ளது மட்டுமல்ல கதையின் நம்பகத் தன்மையையும் அதிகரித்தன.


மக்கள் களரி இயக்கமானது சிங்களக் கலைஞர்கள் தமிழில் பேசியும் தமிழ்க் கலைஞரகள் சிங்களத்தில் பேசியும் நடிக்கும் ஆற்றுகைகள் பலவற்றை ஆரம்பத்திலிருந்தே நிகழ்த்தி வருகிறது. அவர்களின் இம் முயற்சி பாராட்டப்பட வேண்டியது. குறிப்பாகச் சிங்களக் கலைஞரகள் தமிழ் பேசி நடிப்பது என்பது முற்று முழுதாக ஒரு புதிய முயற்சி ஆகும். எந்தையும் தாயும் போன்ற ஒரு யதார்த்த வாழ்க்கையைப் பேசுகின்ற காத்திரமான நாடகபாடத்தை ஆற்றுகைப் படுத்தும்போது மொழி என்பது மிக மிக முக்கியமானது. பொதுவாகத் தமிழ்க் கலைஞர்கள் சிங்க



ளம் பேசுவது போல் சிங்களக் கலைஞர்களால் தமிழ் மொழியை செம்மையாகப் பேச முடிவதில்லை. பெரும்பாலும் அது கொச்சையாகவே வெளிவந்து விடுகிறது. யதார்த்த வாழ்க்கை ஒன்றின் அனுபவங்களின் வெளிப்பாடாகப் பிரதிபலிக்கக் கூடிய எந்தையும் தாயும் போன்ற ஆற்றுகைகளில் கொச்சைத் தமிழ் பேசப்படும் போது ஒன்று அந்த ஆற்றுகையின் காத்திரத் தன்மை குறைக்கப்படுகிறது. இதனால் தமிழ்ப் பார்வையாளர்கள் எரிச்சலடைவதும் தவிரக்க முடியாத ஒன்றாகி விடுகிறது. ஆகவே சிங்களக் கலைஞர்கள் காத்திரமான முறையில் முயற்சி எடுத்துத் தமிழைப் பிழையின்றி உச்சரிக்கக் கற்றுக் கொள்ள வேண்டும். அல்லது சிங்களக் கலைஞர்கள் சிங்களத்திலும் தமிழ்க் கலைஞர்கள் தமிழிலும் ஆற்றகை செய்வது பற்றி மக்கள் களரி அமைப்பு சிந்திக்க வேண்டும்.

இவ் அமைப்பானது வெறும் அரங்கச் செயற்பாடுகளை நோக்காகக் கொண்ட அமைப்பல்ல. அவர்கள் அரங்கினூடாக இன முரண்பாடு மற்றும் சமாதானத்தைக் கட்டியெழுப்புதல் ஆகிய நோக்குகளுடனும் செயற்படுபவர்கள். அந்த வகையில் சிங்களக் கலைஞர்கள் தமிழ் மக்களின் அனுபவங்களை அனுபவிக்க வைப்பது என்பது இனங்களுக்கிடையிலான பரஸ்பர புரிந்துணர்வை ஏற்படுத்தவும் போரின் அவலங்களை ஆத்மார்த்தமாக அனுபவிக்கவும் சிறந்த பயிற்சியாக அமையும். இதுவே அரங்கு என்பதன் உச்சப் பயன்பாடும் ஆகும். கலைஞன் பார்போர் மத்தியில் கருத்து மாற்றங்களை ஏற்படுத்த முன்னர தானே அந்த மாற்றத்துக்குட்பட வேண்டியுள்ளவனாக இருக்கிறான். போர்ச் சூழல் வாழ்க்கையை அரங்கில் தனது அனுபவமாக மாற்றும் போது கலைஞனும் மாறுகிறான். பார்வையாளரும் மாற்றப்படுகின்றனர். அதுவே நேரமையான ஆற்றுகையும் நேர்மையான சமாதான முன்னெடுப்பு முயற்சியும் ஆகும்.

# காத்தான்குடி நகர ஆசிய நிலையமும்




காத்தான்குடி நகரசபையும் ஆசிய நிலையமும் இணைந்து பல்வேறு திட்டங்களை மேற்கொண்டுள்ளன. ஆசிய நிலையத்தின் உள்ளூர் பொருளாதார ஆட்சி செயற்திட்டத்தின் கீழேயே இதுவும் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இங்கே உள்ள வர்த்தக சங்கம் இந்த ஆசிய நிலையத்தின் வழிகாட்டலிலேயே தற்போது திறம்பட இயங்கி வருகின்றது. காத்தான்குடி வர்த்தக சங்கமானது மு.ப 6 மணி தொடக்கம் பிற்பகல் 10 மணி வரைக்கும் திறந்திருக்கும்.

குறிப்பாக காத்தான் குடி நகரசபை காரியாலயத்தின் அலுவலக கட்டமைப்பிலும் மாற்றங்களையும் புதிய விடையங்களையும் ஆசிய நிலையம் அறிமுகப்படுத்தியுள்ளது. பெண்களுக்கு எதிரான வன்முறைகள் தொடர்பாக பொலிஸாருக்கு முறைப்பாடுகளை போடுவதற்கான ஒரு முறைப்பாட்டுப் பெட்டியும் நகரசபையின் குறைபாடுகளைப் பெற்றுக் கொள்வதற்கான முறைப்பாட்டுப் பெட்டியும் விசேடமாக வைக்கப்பட்டுள்ளன. அத்து

# சபையும்











டன் நகரசபைக் கட்டடத்தை பல பிரிவுகளாகப் பிரித்து மக்களோடு இலகுவாக தமது சேவைகளைப் பெற்றுக் கொடுப்பதற்கான ஏற்பாடுகளும் செய்யப்பட்டுள்ளன. மேலும் மக்களுக்கென்று citizen chart என ஒரு அறிவித்தல் பலகையும் போடப்பட்டுள்ளது. உள்ளூராட்சி மன்றங்களுக்கான ஆசிய நிலையத்தின் செயற்திட்டங்களுக்கு இதுவும் முக்கியமானதொரு சான்றாககாணப்படுகின்றது எனலாம்.



## வ.ஐ.ச.ஜெயபாலன்

*அவனுக்குக் ஒரு கை பிடித்துத் தூக்கிவிட ஆசை மிகுந்தும் துணிச்சல் வரவில்லை.* புயல் இரவில் உதிக்கும் இள நிலவாய் அந்தப் பெண் உடலில் மணல் உதிர முகத்திலும் கூந்தலிலும் படிந்திருந்த மண்ணை வழித்தெறிந்த படி எழுந்தாள். உறைந்துபோன காடு சுதாகரித்துக்கொண்டு வாழிய வாழிய என்று முணுமுணுத்தது. பாலனுக்கு விக்கல் எடுத்தது. அவனது ஆன்மா உருகி உருகிக் கண்களில் வழியத் தொடங்கியது. உடலில் ஐந்து காயங்களைக் கொண்ட அந்தப் பேரழகுத் தேவதை நெற்றியைத் துடைத்து கண் இமைகளைச் சுத்தம் செய்தபடி முறுவலித்தாள். பேச முனைந்த பாலனைப் கொஞ்சம் பொறு என்கிற தோரணையில் கையமர்த்திவிட்டு வாய் மணலைத் துப்பத் தொடங்கினாள். பாலியாறு அவளிடம் ஏதோ சொன்னது. அவள் ஒரு எட்டில் ஆற்றில் இறங்கி கைகளால் முகத்தில் தண்ணீரை வாரி அடித்தபடி வாய் கொப்பளித்தாள். மறு எட்டில் நாணற் புதர்களைக் கடந்தாள். மூன்றாவது எட்டில் தூர இருந்த பெண்கள் குளிக்கும் கற்பாறையின் பின்னே போய் மறைந்துவிட்டாள். பாலன் கண்ணீர் வடிய உடல் நடு நடுங்க மெய்மறந்து போய் நின்றான். வானத்தில் இருந்து அசரீரிபோல ஒரு பாடல் இறங்கியது. பாடும் தேவ கணங்களான கந்தர்வர்களையும்...... கின்னரர்களையும் பற்றி சின்ன வயதுகளில் பாட்டி கதை கதையாகச் சொல்லியிருக்கிறாள். பின்னர் இலக்கியங்களிலும் படித்திருக்கிறான். நகரும் முகில் மீது கின்னரர்கள் சோடியாக அமர்ந்திருந்து காதல் சரசமாடியபடி யாழ்மீட்டிப் பாடும் காட்சிகளைப் பழைய தமிழ்ப் படங்களில் பார்த்திருக்கிறான். பாலன் வானத்தைப் பார்த்தான். முகில்கள் நகர்ந்து கொண்டிருந்தன. அங்கிருந்துதான் பாடல் இறங்கி வந்தது. ஆனாலும் காந்தர்வர்களைக் காணமுடியவில்லை. உச்சியில் கைகோர்த்துக் கூரைபோட்டிருந்த மருத மரக் கொம்பர்கள் நெருங்கி நெரிந்து அவன் காட்சியை மறைத்துக் கொண்டிருந்தன. சூரியன் வேறு இரக்கமின்றி ஒளிரும் விரல்களால் அவனது கண்ணைக் குத்தி இம்சை செய்தது. ஆனாலும் முகிலில் அமர்ந்து பாடுகிற காந்தர்வ அழகியும் ஏனைய காந்தர்வ சோடிகளுடன் சேர்ந்து கீழே பாறை மறைப்பில் குளித்துக் கொண்டிருந்த தேவதையையே வாழ்த்திப் பாடிக் கொண்டிருந்தார்கள். பாறாங்கல் மறைப்பில் குழிக்கும் தேவதையை மேலே முகிலில் அமர்ந்து பாடிக் கொண்டிருந்த காந்தர்வருக்குப் பார்க்க முடிகிறது என்பதைப் பாடல் உணர்த்தியது. பாலனுக்கு அவர்களிடம் எனக்கும் ஒரு லிப்ட் கொடுங்கப்பா என்று கேட்கத் தோன்றியது. ஐந்து காயப் பட்ட அழகி மட்டும் குளித்துக் கொண்டிருக்காவிட்டால் பாலன் குஞ்சை பறித்துச் செல்லும் பருந்தை விரட்டும் கோழிப்பேடு

மாதிரி இதயம் கவர்ந்து முகிலில் ஊரும் அந்தக் காந்தாரியின் பின்னே ஓடியிருப்பான். அந்த காந்தாரி அவ்வளவு அற்புதமாகப் பாடினாள். தேவதை துயிலும் புதைகுழியின்மீது நிழல் விழுத்திக்கொண்டிருந்த மருத மரம் துடித்தது. அதன் கிளையொன்று பாலனை அடிப்பதுபோல நெருங்கி வந்தது. பாலன் மிரண்டடித்துப் பின்னே நகர்ந்தான். அதன் மிலாறுகளும் இலைகளும் கோபத்தோடு அவனை சூழ்ந்தன. அது பாலனை அச்சுறுத்தும் தோரணையில் “மரங்கொத்திப் பிசாசு வருகிற கோபத்துக்கு உன்ர ரெண்டு கண்ணையும் குத்திப் போடுவன், மேல என்னடா மகரந்தப் பையா தெரியுது. அந்த காந்தாரி இந்தக் காட்டாற்றங் கரை ராணியின்ர கால் தூசிக்கும் நிகராடா?” என்று அரற்றியது. பின்னர் சமரசத்துக்கு வருவதுபோல “இதெல்லாம் எங்க வன்னி நாச்சியாருக்கு பிடிக்காது. இனிமேல் இப்படி நடக்காதே என்றது.” பாலனுக்கு எரிச்சலாய் இருந்தது. நீங்களார் என்ர விசயத்தில தலையிட என்று வாய்க்குள் முணுமுணுத்த பாலன் தன் முகத்தை மூடிய இலைகள் நிறைந்த மிலாறுகளை அப்பால் தள்ளிவிட்டான். தேவதை துயிலும் மருத மரத்தின் கோபம் பாலனுக்குப் புரிய வில்லை. மேலிருந்து இறங்கிய வாத்திய இசை அமுங்க காந்தாரியின் பாடல் ஓங்கியது. அதைக் கேட்ட மருதம் பாலனை விட்டுவிட்டு மௌனமாக விலகிச் சென்றது. பாலன் காந்தாரியின் பாடலில் மெய்மறந்தான்.



## பாகம் 16

# காட்டாற்றங் கரை

நெட்டை நெடு மரங்கள் தங்கள்
நீண்ட பசுங் கரத்தால் - ஆறின்மேல்
கட்டிய கூரைதனைப் பிரித்து
கனக மணி வைரம்
கொட்டிடும் சூரியனின் மகளோ
இந்தச் சுந்தரப் பூங்குயிலாள்

அச்சம் மடம் நணம் பயிர்ப்பென்ற
ஆதி விலங்கொடித்தாள்-பெண்கள்
சகமானிடம் என்றுரைத்தாள்.

பெண்கள் விடுதலையும் எங்கள்
தாய் மண்ணின் விடுதலையும்
இரு கண்களென வாழ்ந்தாள்
எங்கள் காலத்தை வென்றுவிட்டாள்.

வானில் இருந்து இறங்கிவந்த பாடலில் பாலனும் காடும் பாலி ஆறும் மெய்மறந்து போனார்கள். திடீரென குதிரையின் கொடூரமான கனைப்பொலி கேட்டது. பலர் நடந்துவரும் காலடி ஓசைகளில் எதிர்ப்பக்க ஆற்றங்கரை அதிர்ந்தது. சிங்கள இராணுவம் தாக்குகிறதோ என்கிற அச்சத்தில் பாலன் ஐயோ என்று அதிர்ந்தான். அவனது கச்சையில் அச்ச மிகுதி ஒரு சொட்டுச் சிறுநீராகக் கழிந்தது. ஆனால் எதிர்க் கரையில் இறங்கிய புகார்த் திரையின் ஊடே ஒரு வெண் குதிரை வீரன் தோன்றினான். அந்த முரடர்களின் மத்தியில் கைகளை விலங்கு மாட்டிய பாவனையில் சேர்த்து வைத்துக்கொண்டு இரண்டு வெள்ளைக்காரர்கள் தலை குனிந்து நின்றார்கள். பாலன் எல்லோரையும் ஒரு முறை பார்த்தான். இது உண்மையல்ல என்று அவர்கள் முகத்தில் தெரிந்த எதோ ஒன்று உணர்த்திக் கொண்டிருந்தது. குதிரை வீரனுக்குப் பக்கத்தில் தமிழ்ப் பண்டிதரைப்போல ஏடும் கையுமாகக் கடுக்கனும் பட்டு வேட்டியும் அணிந்த ஒருத்தர் நின்றார். அவரது குடுமி அவிழ்ந்து காற்றில் பரவி அசைந்துகொண்டிருந்தது. ஒரு வரலாற்றுத் திரைக் காவியமொன்றின் படப்பிடிப்பைப் பார்க்கிறது போல இருந்தாலும் பாலனுக்கு அச்சமாக இருந்தது.



அவனது கவலையெல்லாம் குளித்துக்கொண்டிருக்கும் வன்னித் தேவதையின் பாதுகாப்புப் பற்றியதாகவே இருந்தது. பண்டிதர் தோற்றத்தில் இருந்தவர் குதிரை வீரனை மன்னா என்று விழித்து வன்னி நாட்டின் எல்லைகளைக் குறிக்கும் பழைய பாடலொன்றைப் பாடினார்.

எல்லை வடக்கில் எழில் யாழ் பரவு கடல்
பல்கோர் புகழருவி தெற்கெல்லை-
நல்லதிருக் கோணமலை கீழ்பால்
கேதீச்சரம் மேற்கில்
மானத்திகள் வன்னி நாடு

பின்னர் ஏட்டைவிரித்து தான் எழுதி வைத்திருந்த வாழ்துக் கவியைப் பாடினார்.

வாழிய மன்னா வளம் பெறுக உன்
வன்னி தோள் வலியாய் உந்தன்
தர்மத்தால் மழை பொழியும்
நாள்தோறும் காட்டாறுகள்
நடக்கும் கரை புரண்டு
தாழ் பணிந்து வெள்ளைத் தருக் கரும்
திறை தருக.
பால் பெருகி பழம் பெருகி பழத்
தோடு தேன் பெருகி
நாள் சிறக்க ஆடல் பாடலுடன்
நாடகங்கமும் கோவில் விழாக் கள்
கொண்டாட்டம் சீர்களுமாய்.

இது பண்டாரவன்னியா உன் படை நடந்த காடு பணியாது ஒருபோதும் ஈழவர் எம் வீடு. புலவரின் பாடல் மூலம் தன் முன்னே நிற்கிறது பண்டார வன்னியன் என்பதைப் பாலன் உணர்ந்து கொண்டான். அவனுக்கு மீண்டுமொருமுறை உடல் புல்லரித்தது. வடமோடிக் கூத்தாடும் மௌன குருவைப் போல எதிர்க் கரையில் பண்டாரவன்னியன் குதிரையில் இருந்து கம்பீரமாக இறங்கினான். பாலனைப் பார்த்து வாழ்க கவிஞரே என்று உற்சாகமாக கத்தியபடி ஆற்றில் இறங்கி கைமண்டையில் தண்ணீர் அள்ளி தன் முகத்திலும் தலையிலும் எற்றினான். பின்னர் வலக் கையால் முகத்து நீரை வழித்து விட்டு குடிக்கக் கைமண்டையில் நீர் அள்ளினான். பொறுங்க பொறுங்க பண்டாரவன்னி



யரே. மேலே ஒரு தேவதை குளிக்கிறாங்க.. பாலன் நீர் அருந்த முயன்ற பண்டார வன்னியனைத் தடுக்க முனைந்தான்.பண்டார வன்னியன் பழ மொழியைச் சொல்லுங்கள் புலவரே என்றபடி நீர் அருந்தினான். என்ன கவிஞன் நீ. நீயெல்லாம் என்னத்த எழுதிக் கிழிக்கப் போற என்று புலவர் பாலனுக்கு வெறுப்பேற்றினார். பழமொழியைச் சொல்லுமோய் என்று பண்டார வன்னியன் புலவரை அதட்டினான்.

தாயைப் பழித்தாலும் தண்ணீரைப் பழியாதே என்பது பழமொழி. மூடா, தண்ணீரைப் பழித்திருந்தால் இந்தப் பாலையில் உன் மூதாதைகள் மக்கள் வாழ்ந்திருக்க முடியுமோ? புலவர் ஏளனம் தொனிக்க வெற்றிப் பெருமிதத்தோடு பேசினார். பண்டாரவன்னியன் தண்ணீர் குடித்து நிமிர்ந்ததும் ஏனையவர்களும் ஆற்றில் இறங்கித் தண்ணீர் குடித்தார்கள். அவர்களைத் தொடர்ந்து குதிரையும் தண்ணீர் அருந்தியது. சில நாட்களின் முன்னம் நடந்த சண்டையில் வெண் குதிரை வீரன் ஒருவன் இயக்கப் பையன்களுக்கு ஆதரவாக வந்து இராணுவத்தைக் கலைத்ததாக ஊரில் பேசிக் கொண்டது ஞாபகத்தில் வந்தது.குதிரை வீரனுக்கு முப்பத்தைந்து வயதிருக்கலாம். அவனது முகத்திலிருந்த கம்பீரமும் திமிரும் பாலனுக்கு ஏற்கனவே பார்த்ததாகத் தோன்றியது. ஓ! வடமோடிக் கூத்தில போர்க்களம்போற மௌனகுருமாதிரி இருக்கு, என்று பாலனுக்குத் தோன்றியது. உயர்நிலைப் பள்ளி மாணவனாக இருந்த போது சக மாணவர்களோடு யாழ்ப்பாணம் பல்கலைக் கழகத்துக்குப் போய் போர்களம் கூத்துப் பார்த்தது நினைவுக்குவரவே அவன் தன் முன்னே நின்ற குதிரை வீரனின் கம்பீரத்தை அடையாளம் கண்டு கொண்டான். பார்க்க அப்பாவி போல இருக்கும் பேரசிரியர் மௌன குரு ராசா வேடம் போட்டு மேடையேறி மட்டக்களப்புப் பாணியில் ஆடிவந்த கம்பீரத்தை அவன் இது வரை மீண்டும் தரிசித்ததில்லை. எதிர்க் கரையில் குதிரையில் இருந்து மௌனகுருவே குதித்து அற்புதமான மட்டக்களப்பு வடமோடிப் பாணியில் அரசன் வரவை ஆடுவதுபோல இருந்தது. ஒரு தசாப்தத்துக்கு முன்னர் கேட்ட அந்தக் கூத்துப் பாடல் மீண்டும் பாலனின் காதுகளில் ஒலித்தது.

ராஜ ராஜ ராஜர் போற்றும்
ராஜமகா ராஜன் வந்தான் வீர தீரன்
கொலுவில் வந்தானே

தகதிகதா திமிதக தெய்
தக தெய்யதா தளாங்கு திமிதக.

வீரதீர வீரர் எல்லாம்
வந்தடி பணியும் வீரன்
வீரதீரன் கொலுவில் வந்தானே


பாலனுக்கு மயிர் கூச்செறிந்தது. மௌனகுருவின் ஆட்டத்தில் இருந்து அவனால் விடுபட முடியவில்லை. எதிர்க் கரையில் குதிரை வீரனாக வந்து மௌனகுருவே ஆடிக்கொண்டிருப்பதாகத் தோன்றியது.

தகஜுனு தகதிமி தாம் தாம் தாம்
தெய்ய
தகஜுனு தகதிமி தெய்

சித்திர முடியது நெத்தியில்
ஒளிசெய்ய
தேவர்கள் கண்டோட வெற்றிக்
கவசம் மார்பினில் இலங்கிட
வீரர்கள் கோசமிட
மத்தளம் அதிர வெற்றிச் சங்கின்
வாழ்த்தொலி வானதிர
பத்துத் தலைநகர்க் கதிபன் ராவணன்
தேர்தனில் ஏறுகிறான்.
தகஜுனு தகதிமி தாம் தாம் தாம்
தெய்ய
தகஜுனு தகதிமி தெய்

எதிர்க் கரையில் சந்தடி எழுந்தது. வேடம் கட்டி ஆடும் மௌனகுரு அளவுக்கு இல்லாவிட்டாலும் ஓரளவுக்கு வெண்குதிரை வீரனும் கம்பீரமாகவே இருந்தான். நல்லா வடமோடி ஆடுறீங்களே பண்டார வன்னியன்.

**கம்பீரம் தொடரும்..**





கனகம்மா: என்ர வீட்டுக்
குடிச்சிட்டு வர்றாருடி.

சுப்பம்மா: நீ கேக்க வே
தானே?


கனகம்மா: ச்சீ.. எனக்கு
பழக்கம் கிடையா.

# கணவ
# மனைவி
# ஜே

மனைவி: ஒரு மணித்தியாலமா என்னத்தை தேடுறியள். பேசாம கண்ணாடியை போட்டுத் தேட வேண்டியது தானே?

கணவன்: அதைத்தான் தேடிட்டு இருக்கன்.

மனைவி: ...? ...? ...?



கணவன்: உன்னை கல
பண்ணுறதுக்கு முதல்
நரகத்தில எல்லாம் நம்

மனைவி: இப்ப?

கணவன்: நரகத்தை
முழுசாப்பாத்துட்டன், இ
சொர்க்கத்தை தேடோனு

க்காரர் தினமும்

வண்டியது

ந குடிக்கிற

ன்

ோக்ஸ்


ல்யாணம்
சொர்க்கம்,
ம்பிக்கை இல்லை.

இனிமேல்தான்
ணும்.

கணவன்: இந்த மாசச் சம்பளம் இல்லை, பதிலுக்கு ஐந்நூறு தரம் உன்னைக் கொஞ்சி விடுறன். பிரச்சனையில்லைத் தானே!

மனைவி: எனக்கொண்டும் பிரச்சினை இல்லை. நீங்கள் தாராளமாக் கொஞ்சுங்கோ, நானும் சந்திக் கடைக்காரனுக்கும், பேப்பர்க் காரனுக்கும், பால்காரனுக்கும் கொஞ்ச வேண்டித் தானிருக்கும். அவங்களுக்கும் காசு குடுக்கோணும் எல்லே. உங்களுக்கு அதில பிரச்சனையில்லைத் தானே

கணவன்: ???







பெரும் அரசே!
நீ ஒரு வல்லரசென்பது
மெத்தச் சரிதான்
மண்டை ஓடுகளின் மீதுதானே
வல்லூறுகள் கொடி நாட்டும்!

உனக்கோ
கிழித்துப் படிக்க
உடலில்லை என்ற கவலை
எமக்கோ
உடலைப் புதைத்து மறக்க
திடலில்லை என்ற கவலை

கஞ்சனுக்கு கர்ணன் என்று பெயர் வைத்ததுபோல
உனக்கும் சன நாயகம் என்றொரு பெயர்
காந்தி சிலைபோல நடுத்தெருவில்
கிடக்கிறதுன் சன நாயகம்

பூசணிகளைக் கூட சோறு மூடலாம் - ஆனால்
உன் ஆக்கிரமிப்பு நிர்வாணத்தை
நிவாரண ஆடைகள் மூடாது

கோவணத்தால் தலைப்பாகை
கட்டுவது போலிருக்கிறதுன் செய்தி.

# நிர்வாணம்

**மட்டுவில் ஞானக்குமரன்**



நீ வலிசெய்தால் அது மனித நேயம்
உனக்கு வலிசெய்தால் அது மனுகுல விரோதம்

கோவணத்தால் தலைப்பாகை
கட்டுவது போலிருக்கிறதுன் செய்தி
அதுவும் சரிதான்

..................தால் .................கை
கட்டியவர் செய்திதானே



சகோதரத்துவம் என்றால் என்ன?

காயத்ரி
வெள்ளவத்தை.

மூன்று சகோதரர்களுடன் பிறத்தல்.

சர்வதேசம் எங்கள் விடயத்தில் கவனம் செலுத்துகிறதா?

பிறையாளன்
கழுதாவளை.

உங்கள் கேள்வியில் இருக்கும் "எங்கள்" என்ற வார்த்தையை சரிவரப் புரிந்து கொள்ள முடியவில்லை என்பதால் பதில் தர முடியவில்லை. மன்னிக்கவும்.

வருமான வரி செலுத்துகிறீர்களா?

செந்தில்
தெகிவளை.

உள் நாட்டு வருமான வரியா?

ஸ்லம்டோக் மில்லினயர் பார்த்தீர்களா?

கலை
மஸ்கெலியா.

அண்மைக்காலத்தில் பார்த்த இரண்டு படங்கள் மனதை ஈர்த்தன,ஒன்று நம் பாலாவின் "நான் கடவுள்", மற்றையது "ஸ்லம்டோக் மில்லினயர்". ஸ்லம் டோக் மில்லினரில் வட இந்தியச் சேரிப்புறத்தை உள் நுழைந்து பார்க்க முடிகிறது. மலத்தில் விழுந்து இயல்பாய் ஓடும் இந்திய ஏழ்மைகளைத்தான் மேலைத்தேசம் இன்றும் ரசிக்கிறது என்பதை புரிகின்றோம். நான் கடவுள்....ஒருமுறை பாருங்களேன்.

தீக்குளிப்புக்கள் பற்றி.....?

மயுரன்
அக்கரைபற்று.

ஆங்காங்கே தமிழ்ப் பொந்துகளில் தியாகிக்கும் அக்கினிக் குஞ்சுகள். என்ன ஆகியும் என்ன, இதுவரை காடு எதுவும் வெந்து தணிவதாய் இல்லையே என்கிற வேதனைதான் எழுகிறது.

எதை நம்ப முடியாமல் இருக்கிறது?

ஐங்கரன்
மூளாய்.

கலைஞரின் முதுகுவலியை.









உலகப் பொருளாதார மந்தத்திற்கான காரணம் என்ன?

வதனி
கொள்ளுப்பிட்டி.


"பேராசை"."ஆசை அறுமின்! ஆசை அறுமின்!" என்று ஆன்மீகம் சொன்னதைக் கேளாத லௌகீகத்தின் அறியாமை. அமெரிக்காவில் ஈடு கொடுத்தவன், காப்பீட்டாளன், முதலீட்டாளனின் வருமான ஆசை. எதுவுமிலாமல் வீடு வாங்கிய அமெரிக்கனின் ஆசை. அதெல்லாம் இருக்கட்டும், உயிர் வாழ்வே மந்தமாய்ப் போன உங்களுக்கு உலக மந்தம் பற்றி என்ன கவலை.



# ஐயன் பதில்கள்

# பாடுக மனமே



எரிந்த புல்வெளிகளில்
இனி வரவுள்ள மழையையும்
பூத்திடும் கனவுகளையும்
பாடுகிற கவிஞனடி நான்
கலங்காதே தாய் மண்ணே.

வணக்கத்துக்குரிய நம்
மூதாதையர்களின்
எலும்புகள்மீது
எந்தத் தீயும் நிலைக்காது
ஆதலினால்
நாளைய வசந்தப் பரணியைப் பாடுக
மனமே.

கருமேகமாய் விரியும் சாம்பல்
வெளியில் நின்று
இனி வானவில்லாகவுள்ள
பூக்களையே பாடுக மனமே.

உறவுகளின் ஓலங்களை அமுக்கும்
தோழ தோழியரின் போர்முரசுகளே
என் வசந்தப் பரணிக்குஇசையுங்கள்.

அம்மா !
தமிழ் மண்ணெடுத்து
இன்பப் பொழுதொன்றில்
நீயும் எந்தையும்
அழகுற என்னை வனைந்தீர்களே.
இதோ என் ஐம்பூதங்களால்
உனக்கு வனைவேன் ஓர் அரண்.

உன்னை உதைக்கிற
அன்னியனின் காலை ஒடிக்காமல்
என்ன மசிருக்கு இந்த வாழ்வு.

வன்னிப் பெருந்தாயே
உன் கூப்பிட்ட குரலுக்கு
ஏழு சமுத்திரங்களிலும்
தமிழர் விழிக்கின்றார்.
பாஞ்சாலம் குறிச்சியும்
சிவகங்கைச் சீமையும்கூட
விழிக்கிறது.
உலகக் கோடியின் கடைசித்
தமிழனுக்கும்
உன் விடுதலைக் கனவுதான் தாயே.

மொழியில் வேரூன்றி
நினைவுகளில் படர்ந்து
கனவுகளில் பூக்கிற
புலம்பெயர்ந்த தமிழன்நான்.

நினைவிருக்கிறதா தாயே
"எத்தனை காட்டுத் தீகளும்
அணைந்தே போகும்
முகம் கொடுக்கும் புல்வெளிகளோ
பூத்துக் குலுங்கும்" - என
வியட்னாம் எரிகையில்
நான் பாடிய பாடல்.
என் அன்னை மண்ணில்
நெருப்பிடை நின்று
அப்பாடலையே பாடுக மனசே.

**வ.ஐ.ச.ஜெயபாலன்**



**மைதிலி** அந்த வீட்டில் தன் தங்கைகளுடன் தனித்து விடப்பட்டாள். முரகேசரின் காரியங்கள் அனைத்தும் முடிந்துவிட்டன. அந்தியேட்டியை முடித்துக் கொண்டு மாணிக்கராசா மன்னாருக்கு வேலைக்குப் போய் விட்டான். இறுதிச் சடங்கின் நிகழ்வுகளில் மணிசேகரனும் ஒருவனாகக் கலந்து கொண்டான். "நீ கவலைப்படாமல் வேலைக்குப் போ தம்பி. நாங்க தங்கச்சிமாரைக் கவனித்துக் கொள்ளுறம். முருகேசரின்ர ஆட்டுத்துவசம் முடிந்ததும் கெதியில் உன்ரை கலியாணத்தையும் மைதிலியின்ர கலியாணத்தையும் முடிப்பம். மைதிலிக்கு மகேந்திரனைக் கட்டிக் கொடுத்து விட்டால் அவன் வீட்டோட எல்லாருக்கும் துணையாக இருந்திடுவான்." என்றார் பொன்னப்பர். அவரின் வார்த்தைகள் நாராசமாக மைதிலியைத் தாக்கின. மகேந்திரனுக்குத் தன் தங்கை மைதிலியைக் கலியாணம் செய்து கொடுக்கின்ற எண்ணம் மாணிக்கராசாவுக்கு எப்பொழுதும் தோன்றியவில்லை. தேநீர்க்கடையின் பெயரால் சாராயத் தொழில் நடாத்தி வருகின்ற மகேந்திரனுக்கு மைதிலியைக் கொடுப்பதா? மகேந்திரன் குடிக்கவும் செய்கிறானென அவன் அறிந்திருந்தான். என்றாலும் மைதி



# செங்கை ஆழியானின் ருத்ர தாண்டவம்

லியோடு மூன்று மருகளை வைத்துக் கொண்டு அவன் என்ன செய்யப் போகின்றான்? 'ஐயாவை இப்படிப் பறிகொடுத்து விட்டமே? ஏன் அக்கா எங்களுக்கு மட்டும் இப்படி? இனி என்ன செய்யப்போறம்? ஏன் அப்படிச் செய்யிறான்கள்?' என்று மலர் தமைக்கையைக் கேட்டாள். 'இந்த முறை எங்கட வயல் நல்லா வந்திருக்குது எண்டு ஐயா எப்படி மகிழ்ந்தார் பச்சைப்பசேலென்று செழித்திருப்பதாகச் சொன்னார். சா விளைச்சல் போல இருக்குது. இனி ஆர் வயலைப் பார்ப்பினம்? அண்ணையால முடியாது. எங்களை ஆர் இனிப்பார்ப்பினம் அக்கா?.' 'அண்ணை இருக்கிறார் தானே? நீ ஏன் கவலைப்படுகிறாய்?' என்று தங்கைக்கு மைதிலி ஆறுதல் கூறினாள். 'அவர் கலியாணம் செய்து கொண்டு போய்விட்டால்?' 'நானிருக்கிறன் தங்கச்சி.எங்கட வயல் இருக்குது சாப்பாடு போடும். ஆக்களை வைச்சு நான் வயல் செய்விப்பன். கவலைப்படாதை மலர்.' அப்போதுதான் அந்தக் கேள்வியை மலர் கேட்டாள். 'அவர் உன்னைக்கட்டிக் கொள்வாரா அக்கா?' மைதிலியை வியப்புப் பீடித்தது. 'எவர்?' 'இங்க வந்து போவாரே அவர். மணிசேகரன் சேர்.' ஒன்றுமே தெரியாதென எண்ணியிருந்த இச்சிறுபெண் எவ்வளவு நுணுக்கமாக அவதானித்திருக்கிறாள். அறிந்து வைத்திருக்கிறாள். 'எனக்குத் தெரியாது.' 'கேட்டுவிடு இல்லாட்டில் நான் கேக்கிறன்.' 'கேக்ககிற நேரமா இது மலர்?' 'பேந்து எப்ப கேக்கிறது?. மகேந்திரன் மச்சானுக்கு உன்னை முடிவாக்கிய பின்னரா? மணிசேகரின் சேரைக் கட்டிக்கொண்டு நீ போயிட்டா நானும் மைதிலியும் தனிச்சுவிடுவம் எண்டு பயப்படாதை அக்கா. நான் குடும்பத்தைப் பார்ப்பன். அந்தத் துணிச்சல் எனக்கு இருக்குது. எங்களுக்காக உன்ரை வாழ்வைப் பழுதாக்கிக் கொள்ளாதை அக்கா.' தங்கையை மைதிலி வியப்புடனும் நம்பிக்கையுடனும் பார்த்தாள். அந்த நேரம் படலையைத் திறந்து கொண்டு வேட்டைக்கார சின்னப்பு வந்தான். அவன் கரத்தில் பனையோலைக் குடலை ஒன்று காணப்பட்டது. அது புடைத்திருந்தது. 'தங்கச்சி, பன்றியிறைச்சி கொண்டு வந்திருக்கிறன். அரைப்பங்கு தான்.' 'எங்களுக்கு வேண்டாம் அண்ணை. காசில்லை இப்பதாறதுக்கு.' 'ஆர் காசு கேட்டது?' 'முருகேசண்ணை போனதும் எல்லாம் போச்சுதே பிள்ளை? ஒருத்தற்ற மரணத்தோடு வாழ்க்கை முடியுறதில்லை. நாங்க துணிச்சலோடு வாழ்க்கையை வாழ்ந்து முடிக்க வேணும். காசு பேந்து தரலாம். சின்னத்தங்கச்சி இந்தா உள்ள வாங்கிப்போ.' என்று பனையோலைக் குடலை மலரிடம் நீட்டினான். மலர் வாங்கிக் கொண்டாள். அதன் பின்னரும் சின்னப்பு தயங்கி நின்றான். என்ன அண்ணை? ஏதாவது விசயமே? அப்படியொன்றுமில்லை தங்கச்சி முருரசேசண்ணற்றை வயலுக்குப் பக்கத்தில எனக்கொரு

ரெண்டேக்கர் இருக்குது. இனித்தான் விதைக்கப் போறன். உங்கட வயல் புழுதியில நேர காலத்தோட விதைச்சதால பால் வைச்சிட்டுத்து. அதை நான் பார்த்துத் தரவே? எண்டு கேக்கவும் வந்தனான். அதைப்பற்றி அண்ணரிடம் தான் கேக்கவேணும். பொன்னப்பர் அம்மானிடமும் கேக்கவேணும். நான் இதில முடிவு செய்ய முடியாது அண்ணை. வெள்ளாங்குளத்தைவிட்டு எப்ப ஓடப்போறம் எண்டு தெரியவில்லை. இனி விதைக்கப் போறம் என்கிறியள்? கனபேர் விதைக்காமல் பாத்துக் கொண்டிருக்கினமாம். முதல் பொம்பர் அடியோட இரண்டு குடும்பங்கள் வீடு வாசலை விட்டிட்டுத் துணுக்காயுக்கு ஓடிவிட்டுதாம். தெரியுமே? நானும் கேள்விப்பட்டன் தங்கச்சி. அதுக்காக விதைக்காமல் விடமுடியாது. விதைக்கா விட்டால் அடுத்த வரியம் பட்டினி கிடக்க வேண்டியது தான். இப்பவே சாதுவாப் பசி பட்டினி தலை தூக்கத் தொடங்கிவிட்டது. நெல்விதைப்பை எதிர்பார்த்திருக்கும் கூலியாக்கள் வீட்டிலே அடுப்பெரிந்து சில நாளாகுது . வெள்ளாங்குளத்தில விதைப்புத் தொழில் நடக்காவிடில் பஞ்சத்தில பலர் செத்துப்போவினம். பங்காளர்களும் விதை நெல்லைச்சாப்பிடத் தொடங்கிவிடுவினம். மழைபெய்தும் குளத்தில் தண்ணி வந்தும் வயல்கள் வெறும் கட்டாந்தரையாகக் கிடக்கப்போகுது. நான் விதைக்கத் தான் போறன். பக்கத்தில முருகேசற்றை விதைப்பைக் காப்பாற்றித் தரலாம் எண்டு தான் கேட்டன். அதில ஏதாவது கிடைக்குந் தானே? காளி அம்மன் பொங்கல் திருவிழாவில் பொம்பர் விமானங்கள் குண்டுகளை வீசிப் பலரைப் பலியெடுத்தும் காயப்படுத்தியும் விட்டதால் வெள்ளாங்குள மக்கள்





பயந்துவிட்டார்கள். இரவிரவாகக் காட்டுப்பாதையால் துணுக்காய்க்கு அகதிகளாக ஓடிவிடப்பார்த்தார்கள். பொன்னப்பரும் அம்பலவாணரும் அவர்களைத் தடுத்து நிறுத்தினார்கள். எங்கை போனாலும் பொம்பர் அடிக்காமல் விடமாட்டான்கள். அதுக்காக வீடுகளை விட்டிட்டு ஓடக்கூடாது. ஓடிப்போகிற இடங்களில இருக்க இடமில்லாமல் பிள்ளை குட்டியளோட தவிக்கக் கூடாது. போகிற இடங்களில் சாப்பாடு இல்லாமல் மருந்தில்லாமல் தவிக்கக்கூடாது.இது முதல் தடவை தானே? பொறுத்திருங்கோ பார்ப்பம். மீண்டும் தொடர்ந்தால் எல்லாரும் போவம் என்றார் பொன்னப்பர். அவர் கூறியவை சரியாகப்பட்டதால் ஓட வெளிக்கிட்ட பல குடும்பங்கள் தங்கிவிட்டன. பொம்பர் குண்டு வீச்சில் சிலரைப் பறிகொடுத்த குடும்பங்கள் ஓரிரு நாட்களில் பயத்தில் ஓடிவிட்டன.

பொம்பர் வீச்சால் வெள்ளாங்குளத்தில் புதியதொரு பிரச்சினை எழுந்தது. மழைபெய்து குளத்தில் நீர் வந்ததும் வயல்களில் வெள்ளம்தேங்கி மண் புளித்தும் சேற்று விதைப்புச் செய்யக் காத்திருந்தவர்கள் வயல்களில் இறங்காது தயங்கியிருந்தனர். உழுவதற்குத் தயாராக இருந்த எருதுகள் பட்டிகளில் இளைப்பாறின. கலப்பைகள் இறப்புகளில் தொங்கின. டிறக்டர்கள் வளவுகளில் வேலையின்றித் தூங்கின. தம் வயல்களில் பங்காளர் உழுது விதைத்துப் பொது வேலி போடாததால் புழுதி விதைப்புச்செய்து பால் கக்கி வளர்ந்திருக்கின்ற தம் பயிர்களைக் ஊராரின் கால்நடைகள் மேய்ந்து விடலாமென்ற பயம் பொன்னப்பருக்கு ஏற்படலாயிற்று. வயல்களைச் சுற்றிப்போடப் பங்கு பிரித்து வழங்கிய பொது வேலியை இடுமாறு விதைக்காமல் இருக்கிற

பங்காளரைக் கேட்க முடியாது. பயிர்ச்செய்கைக் கூட்டத்தில் எடுத்த முடிவுகளைக் கைக்கொள்ளுமாறு பங்காளரை வற்புறுத்த பொன்னப்பர் தயங்கினார். ஊரைவிட்டு ஓடத் தயாராக இருக்கின்ற நிலையில் அவர்களை எப்படிக் கேட்பது? வேட்டைக் கார சின்னப்பு திரும்பிப்போகும்போது இன்னொரு சங்கதியையும் சொன்னான். சுற்றிவர வயல்கள் விதைக்காமல் இருப்பதனால் காட்டுப்பன்றிகள் புழுதி விதைப்புச் செய்து வளர்ந்திருக்கின்ற உங்கட வயல் பாத்திகள் பக்கம் வரத்தொடங்கிவிட்டன. எல்லைப்புற வயல்களை எப்பவும் நாசம் செய்யிறவை அவை வெறுமனே கிடப்பதால் மத்தியிலுள்ள உங்கட வயல் பாத்திகளுக்கு வரத் தொடங்கிவிட்டன. நான் வேட்டைக்குப் போனபோது கவனிச்சன். பன்றிகளின்ர காலடிகள் உங்கட வயல் வரம்புகளில காணப்பட்டன. அவர்களுக்குப் பேரிடியாக இருந்தது. இனி நடக்க என்ன இருக்கிறது? நடக்கிறது நடக்கட்டும் என மைதிலி தன்னைத் திடப்படுத்திக் கொண்டாள். அன்று மாலை கவிழ்கின்ற வேளையில் மணிசேகரன் முன்னர் போல மாணிக்கராசாவைத் தவிர்த்துவிட்டு வேறு றைவரோடு ஜீப்பில் மைதிலியைக் காண வந்திருந்தான். முருகேசரின் அந்திரேட்டியில் கலந்து கொண்டபின்னர் இன்றுதான் வந்திருக்கிறான். மணிசேகரன் வருவதைக்கண்டதும் மலர் எழுந்து இன்றாவது கேட்டுவிடு அக்கா என்றபடி உள்ளே சென்றுவிட மைதிலி எழுந்து நின்றாள். அவன் சிரித்தபடி வந்து வாங்கில் அமர்ந்தான். வாங்கோ. இன்று தான் என் நினைவு வந்ததாக்கும். மைதிலி அடிக்கடி வர விருப்பம் தான். முடியவில்லை பார்க்கிறவை என்ன நினைப்பினம். மாணிக்கராசாவை அவொயிட் பண்ணிவிட்டு வாறது வேறை சிரமம். ஊம்மிடம் ஒன்று கேட்கத்தான் இண்டைக்கு வந்தன். அவனை அவள் ஏறிட்டுப்பார்த்தாள். அவர்களின் விழிகள் ஒன்றையொன்று சந்தித்துக் கொண்டன. என்ன கேக்கப்போறியள்? அவன் மௌனமாகச் சில பொழுது இருந்



**அக்கா உங்களைத் தான் நம்பி இருக்கிறா? எப்பவும நினைச்சுக் கொண்டிருக்கிறா.. ஏமாத்திப் போடாதையுங்கோ. நீங்க ரவுன் ஆக்கள். நாங்க யாருமற்ற சூதவாதற்ற கிராமத்துப் பெண்கள்.**

தான். பின்னர் அவளைப் பார்த்துச் சிரித்தான். றோட்டில மகேந்திரன் என்பவரைச் சந்தித்தன் மைதிலி. நான் சேர்வே காம்ப்பில் நின்ற போது வலிய வந்து சம்பந்தம் இல்லாமல் பேசினான். நீங்க இனி எங்கை போகப்போறியள் எண்டு தெரியும் ஆம்பிளையள் இல்லாத வீடு. நீங்கள் சும்மா காரணமில்லாமல் அங்க போறது சரியில்லை. மாணிக்க ராசா மச்சானும் வரவில்லை. என்றான். என்ன சொல்லுறியள்? என்றேன். மைதிலியை நான் கட்டப் போறன் அவ என்ரை சொந்த மச்சாள். கெதியில எங்களுக்குக் கலியாணம் நடக்க இருக்குது. அம்மானின் ஆட்டுத்துவசம் முடிஞ்ச கையோட நடக்க இருக்குது என்றான். என்னட்டை ஏன் சொல்லுறியள் என்று விட்டு நான் வந்திட்டன். மைதிலி எனக்கு ஒழிச்சு மறைச்சுக் கதைக்கத் தெரியாது. அவன் சொன்னவை மெய்யா?

மைதிலி சற்று உறைந்து போனாள். மகேந்திரனுக்கு அப்படியொரு எண்ணமிருப்பது அவளுக்குத் தெரியாததன்று. பல தடைவை தன் விருப்பந்தைச் சொல்லியுமிருக்கிறான். ஆனால் அவள் மனதில் அவன் இடம் பிடிக்கவில்லை. அவள் மணிசேகரைச் சந்தித்த பின்னர் அவள் இதயபீடத்தில் அவன் இடம் கொண்டுவிட்டான். வேறொருத்தனை அவ்விடத்தில் பிரதிஷ்டை செய்ய முடியாது. அவர் எனக்கு மச்சான்தான். அதுக்காக நான் அவரைத் தான் கட்டப்போறன் என்பதில் உண்மையில்லை. அவர் விரும்பியிருக்கலாம். ஆனா அப்படியொரு எண்ணம் எனக்கு எப்பவும் இருந்ததில்லை. உங்களைக் கண்டதிலிருந்து அப்படியெண்ணவும் முடியவில்லை. உங்களை மனதில் நினைத்துக் கொண்ட என்னால் எப்படி இன்னொருவரை நினைக்க முடியும்? எனக்குக் கலியாண வாழ்க்கையென்று ஒன்றுண்டென்றால் அது உங்களோட தான். நிச்சயம் அது தான். மலர் அடுக்களைக்குள்ளிருநது தேநீருடன் வெளியே வந்து கிளாசை அவனிடம் நீட்டினாள். எதையோ சொல்ல விரும்புபவள் போலத் தயங்கி நின்றாள். அக்கா உங்களைத் தான் நம்பி இருக்கிறா? எப்பவும நினைச்சுக் கொண்டிருக்கிறா.. ஏமாத்திப் போடாதையுங்கோ. நீங்க ரவுன் ஆக்கள். நாங்க யாருமற்ற சூதுவாதற்ற கிராமத்துப் பெண்கள். அப்படிச் செய்ய மாட்டன். இந்தக்கிழமை யாழ்ப்பாணம் போக இருக்கிறன். அம்மாவிடம் சொல்லி நல்ல முடிவுடன் தான் திரும்பி வருவன். என்ர அம்மா என்ரை விருப்பத்துக்கு மாறா எதுவும் சொல்ல மாட்டா. ஒத்துக் கொள்வா. மலர் மகிழ்ச்சியுடன் உள்ளே சென்றாள். அதற்குப் பின்னர் மைதிலியும் மணிசேகரனும் பலவற்றைப் பேசிக்கொண்டனர். தாயின் சம்மதத்துடன் திரும்பி வந்து அவளைக் கலியாணம் செய்து கொள்வதாக அவன் உறுதி அளித்தான்.

-தொடரும்-

# முஸ்லிம் பெண்களின் அரசியல்



**தெஹிவளை கல்கிஸ்ஸை மாநகரசபை உறுப்பினர் திருமதி மரீனா ஆப்தீன் அவர்கள் முஸ்லிம் பெண்களின் அரசியல் தொடர்பாக வழங்கிய நேர்காணல்.**

**நேர்கண்டவர்**
**பஸ்லான் மொஹமட்**

கேள்வி - நீங்கள் அரசியலுக்கு வருவதற்கான பின்னணி என்ன?

பதில் - என்னுடைய அம்மா, திருமதி உம்மு தாபியா ஆப்தின் சுமார் 40 வருடங்களாக அரசியலில் ஈடுபட்ட ஒருவர்,

நானும் எனது அம்மாவைப் போன்று எந்நேரமும் மக்களுக்கு உதவிசெய்ய விரும்புகின்றேன். பெண்கள் என்றால் எப்போதும் அமைதியாக இருக்க வேண்டும் என நினைக்கின்றார்கள். பெண்களுக்கும் உரிமை இருக்கின்றது. அவர்களாலும் வேலை செய்ய முடியும் என்ற நம்பிக்கை இருந்த தால்தான் நானும் அரசியலுக்கு வந்தேன். ஆண்கள் மாத்திரம்தான் அரசியலில் ஈடுபடவேண்டும் என்ற மனப்பான்மை கல்வி கற்ற சகல இன பெண்களிடமும் காணப்படு கின்றது. ஆனால் அப்படியல்ல பெண்களுக்கும் முடியும் என்ற எனது தாயின் பயணத்தை தொட ரவே நானும் மாநகர சபைத் தேர்த லில் போட்டியிட எண்ணினேன்.

கேள்வி - தேசிய ரீதியாக அரசி யலில் முன்வரவேண்டும் என்ற

எதிர்பார்ப்பு காணப்படுகின்றதா?

பதில் - இல்லை, தெஹிவளை, கல்கிஸ்ஸை, இரத்மலானை மக்களுக்கு சேவை செய்ய வேண்டுமென்பதே எனது எதிர்பார்பாக காணப்படுகின்றது. அவர்களுக்கு என்னால் முடிந்தளவு உயரிய சேவையை வழங்கவேண்டும் என்பதே எனது எதிர்ப்பார்ப்பாகும்.

கேள்வி - தேசியமட்டத்தில் தெரிவானால் இதனைவிட உயரிய சேவையை அவர்களுக்கு வழங்கலாமே?

பதில் - அதனை ஒரு புறத்தில் வைப்போம். கீழ் மட்டத்தில் உள்ள மக்களின் வடிகால், முன்பள்ளி, வரி செலுத்துதல், பாதை போன்ற பிரச்சினைகளுடன் நெருக்கமாகச் செயல்படக்கூடிய தன்மை உள்ளூராட்சி மன்றங்களுக்குக் காணப்படுகின்றது. கீழ்மட்ட மக்களுக்கு சேவை செய்யக்கூடிய மிகச்சிறந்த அமைப்பே உள்ளூராட்சி மன்றமாகும். ஆகவே என்னைத் தெரிவு செய்த மக்களுக்கு சேவை செய்ய வேண்டும் என்பதே எனது நோக்கமாகும். அவர்கள் விரும்பினால் மட்டுமே அடுத்த கட்ட அரசியல் பற்றி சிந்திப்பேன்.





சேவை செய்ய வேண்டும் என்பதே எனது நோக்கமாகும் அவர்கள் விரும்பினால் மட்டுமே அடுத்த கட்ட அரசியல் பற்றி சிந்திப்பேன்

கேள்வி - பெண்களின் அரசியல் பங்குபற்றல் தொடர்பான உங்களது அபிப்பிராயம்....

பதில்- இலங்கையில் சில பெண்கள் அரசியல்வாதிகளாக இருக்கின்றார்கள். ஆனால் அவர்கள் குடும்ப அரசியலின் பின்னணி மூலமே அரசியலில் நுழைந்தார்கள். பெண்களின் அரசியல் பங்குபற்றலின் போதாமைக்கு பிரதான காரணம் அச்சம் ஆகும். ஆனால் உண்மையில்



பெண்கள் அச்சப்பட வேண்டிய தில்லை. எமது மாநகரசபையானது அதற்கு சிறந்த எடுத்துக்காட்டாகும். இம்மாநகரசபையின் தலைவர் ஒரு பெண். நான் ஒரு முஸ்லிம் பெண், J.V.P பெண் உறுப்பினரொருவரும் காணப்படுகின்றார். அத்துடன் மாநகர செயலாளரும் ஒரு பெண் ஆவார். பெண்கள்தான் பெண்களின் பிரச்சினைகள் பற்றி நன்கு அறிவார்கள். அவர்களால் மட்டுமே பெண்களுக்கு சிறந்த சேவையை வழங்க முடியும்.

கேள்வி - முஸ்லிம் பெண்கள் அரசியலில் பங்குபற்றுவது தொடர்பான உங்களுடைய நிலைப்பாடு என்ன?

பதில் - முஸ்லிம் பெண்கள் கட்டாயமாக அரசியலில் முன்னிற்க வேண்டும். பெனாசீர் பூட்டோ போன்றோர் இதற்கு சிறந்த எடுத்துக்காட்டு ஆகும். இலங்கை முஸ்லிம் பெண்களில் பலர் ஆசிரியைகளாக இருக்கின்றார்கள். இவர்கள் அரசியலுக்கு வருவதே சிறந்தது என்பது தான் எனது அபிப்பிராயம்.

கேள்வி - முஸ்லிம் பெண்கள் அரசியலில் வருவதற்கு பல தடைகள் காணப்படுகின்றனவே....

பதில் - ஆம் எவ்வாறாயினும் முஸ்லிம் பெண்கள் தமது கலாசாரத்துக்குள்ளே இருந்து கொண்டு அரசியலுக்கு வரலாம். நான் ஒரு முஸ்லிம் பெண்ணாக இருந்து கொண்டு பல வேலைகளைச் செய்கின்றேன். என்னால் முடியுமென்றால் ஏன் மற்றவர்களால் முடியாது.

கேள்வி-முஸ்லிம் பெண்களுக்கான உங்களது செய்தி என்ன?

பதில் - முஸ்லிம் பெண்களே முன்னே வாருங்கள், அரசியலுக்கு வாருங்கள். வீட்டிலே சிறந்த குடும்பப் பெண்ணாக இருக்கின்ற அதே வேளை ஏனைய மக்களுக்கும் சேவை செய்ய வேண்டும்.

கேள்வி- மார்ச் 08 ம் திகதி அதாவது சர்வதேச பெண்கள் தினத்தையொட்டிய உங்களுடைய செய்தி என்ன?

பதில் - எல்லா பெண்களும் முன்னின்று இதனை கொண்டாட வேண்டும். பெண்களுக்கு காணப்படும் பிரச்சினைகளான விதவைகளுக்கு உதவுதல், சுயதொழில் வசதி, மற்றும் இது போன்ற ஏனைய பிரச்சினைகளுக்கும் உதவ பெண்கள் முன்வர வேண்டும். பெண்களுக்கு உதவ பெண்களே ஒன்றாக திரண்டு வர வேண்டும்.



# கதிகெட்டு "இருக்கிறம்"

ஆண்டு வந்த ஆண்டு
மீண்டு வருமெண்டு
நினைவாலே களிப்புற்று
நிகழ்கால இடிகளை
நிந்தித்து நோகாமல்
நிம்மதியாய் சாய்ந்திருக்கிறம்!

பாடிய மீனினம்
ஓடியே போச்சுதே
தேடியே ஓடிக்கடலோடு
உடலும் உப்பாச்சுதே
நடு வெயிலில் காய்ந்தழிந்து
சுடுகரையில் மண்ணாகியிருக்கிறம்!

சாக்கிடங்கினுள்
போர்ப்புழுதி மூடி
சோகப் போர்வையுள்
முகம் புதைத்தபடி
அப்புறமே நீங்களறியாமல்
குப்புறவே படுத்திருக்கிறம்!

எதிர்காலம் புதைக்கப்பட்டு
எண்ணமும் தூக்கிலிடப்பட்டு
இடர் வந்தபடி
இடறி விழுந்தபடி
இருட்டறைக்கவிதையாக
இன்னமும் இப்படியேயிருக்கிறம்.

பேனா மைகளும்
புளித்துப் போக
பேச்சு வார்த்தைகளும்
அலுத்துப் போக
மதிகெட்டு
கதிகெட்டு இருக்கிறம்!!

# ஒஞ்சிப்புத்தகமும் ஒரு எச்சரிக்கையும்

**நட்பு என்பது இன்று எல்லோருக்கும் கட்டாயமாக இருக்கவெண்டியதொன்று. இன்றைய நவீன தொழில்நுட்ப உலகில் இணையத்தளங்கள் மூலம் கோடிக்கணக்கானோர் புதிதுபுதிதாய் நட்பினை சுவாசித்துக் கொண்டிருக்கிறார்கள். எம்மில் இன்று எத்தனையோபேர் விடியவிடிய சட்டில்** (chat) **குந்திக்கொண்டு இருப்பதை பார்த்திருக்கின்றோம். ஏன் நாம் கூட இருந்திருப்போம். அத்தகைய ஒரு நட்பு இணையத்தளம்தான் இந்த வேஸ்புக்** Face book.

“முந்தி எல்லாம் இருந்த புகைப்படங்களை Face book இல் பதி வேற்றி அழகு பார்த்தார்கள். ஆனால், இன்று Face book இல் பதிவேற்றுவதற்காகவே புகைப்படங்கள் எடுக்கின்றார்கள்”. என் நண்பனொருவனின் ஆதங்கம் இது. உண்மைதான் உலகில் அதிகூடிய பயனர்களை



# facebook®

உள்வாங்கி அபரிமித வளர்ச்சி கண்டு வரும் இணையத்தளமாக www.facebook.com மாறியுள்ளது.

இதுவரை கலக்கிக்கொண்டிருந்த Hi5, Myspace போன்ற பிரசித்தமான சமூக உறவாடல் தளங்களையெல்லாம் புறமொதுக்கி விட்டு இன்று இணைய வரலாற்றில் Face book தனக்கென ஓரிடத்தை தக்க வைத்துக் கொண்டிருக்கின்றது. பயனர்கள் அதிகளவில் உள்நுழையும் இணையத்தளங்களை பட்டியலிட்ட www.guarkbase.com எனும் இணையத்தளம் Face book இற்கு ஐந்தாமிடத்தை வழங்கியுள்ளதென்றால் பாருங்களேன். (முதலிடத்தில் www.yahoo.com உம் இரண்டாமிடத்தில் www.google.com உம் பட்டியலிடப்பட்டிருக்கின்றன.)


பரந்து விரிந்த உலகம் இன்று தொழில்நுட்பத்தின் அதீத வளர்ச்சியால் உள்ளங்கையளவில் சுருங்கிக் கிடக்கின்றது. இன்று என்னுடனிருந்தவன் நாளை இன்னொரு தேசத்திலிருந்து வணக்கம் சொல்கின்ற காலம் இது. உங்கள் நண்பர்கள் உறவினர்கள் பிடித்தமானவர்கள் ஏன் நண்பர்களின் நண்பர்கள் கூட இன்று எங்கே என்ன செய்து கொண்டிருக்கின்றார்கள் என்பதை தெரிய வைக்கும் குணம்தான் இந்த Face book வெற்றியின் அடிப்படைக்காரணம் என்கின்றார்கள்.

Facebook.. இதை தமிழில் நேரடியாக மொழிபெயர்த்தால் முகப்புத்தகம். எங்கள் தமிழில் சொல்லப் போனால் மூஞ்சிப் புத்தகம். அனேகமான வேலைத்தளங்களில் இது தடைசெய்யப்பட்ட இணையத்தளமாயினும் அந்தத்தடையையும் உடைத்து உள்நுழையும் போதெல்லாம் அருகிலுள்ள என்மொழி நண்பனுடனான உரையாடல்களில் எல்லாம் மூஞ்சிப்புத்தகம் தான்... Facebook அல்ல...! யாருக்கும் எதுவும் புரியாது.

நான் மூஞ்சிப் புத்தகத்தை நேசிக்கின்றேன். ஒன்றாக என்னுடன் இருந்தவர்கள் தூரதேசம் பறந்த போதும் அவர்களை என்னுடனும் நான் அவர்களுடனும் உறவாடிக்கொண்டிருக்கும் பாலம் இது. தொலைந்துவிட்ட என்னுடைய பாலகப்பருவ

நினைவுகள் மீளக்கிடைத்தன. தசாப்தங்களாக எங்கிருக்கின்றோம் என அறியாத நட்புக்கள் தோள்களில் தட்டிக்கொள்கின்றன. கிடைக்காத சொந்தங்கள் கிடைக்கின்றன. புதுப்புது உறவுகள் புன்னகைக்கின்றன. ஆனாலும்..!!! மூஞ்சிப்புத்தகத்திலும் சில துஷ்பிரயோகங்களும் அக்கிரமங்களும் நடந்தேறுகின்றன.

அவன் என்னுடைய நண்பன். மூஞ்சிப்புத்தகத்தில் எப்போதோ அவனுடைய நட்பு வேண்டுகை என்னால் ஏற்கப்பட்டு நண்பர்களின் பட்டியலிலும் இருக்கின்றான். கருத்துக்களும் தகவல்களும் கூட பரிமாறி இருக்கின்றோம். ஆனால் நேற்று இன்னொரு புதிய நட்பு வேண்டுகை அதே பெயரிடமிருந்து... அதனை ஏற்றுக்கொள்ளாது காக்க வைத்துவிட்டு ஒரு தகவல் அனுப்பினேன். பதில் வந்தது- "முன்னையது யாரோ ஒருத்தரால் போலியாக உருவாக்கப்பட்டதாம்... இதுதானாம் நிஜம்..." நான் எதை நம்புவது...???




ஏதோவொரு காரணத்துக்காக உங்களின் மூஞ்சிப்புத்தக பக்கத்தினுள் மாற்றான் எவரும் நுழையாதவாறு தடுப்பரண் அமைத்திருப்பீர்கள். யாரும் ஒருத்தருக்கு மூஞ்சிப்புத்தகத்திலிருந்து தகவல் அனுப்பினால் அவர் உங்கள் விபரங்கள் சிலவற்றை பார்வையிடலாம் எனவும் தெரிந்திருக்கலாம். ஆனால் நடந்தது என்ன...? உங்களின் நண்பர் ஒருத்தர் புதுவருட வாழ்த்து தகவல் ஒன்றினை உங்களுக்கும் அவருடைய நண்பர்களுக்கும் கூட்டாக அனுப்புகின்றார். அந்த வாழ்த்துக்கு நீங்கள் பதிலளித்தவராயின் நீங்கள் அவருடைய நண்பர்களுக்கு தகவல் அனுப்பியவராகவே கருதப்படுவீர்கள். கவனம்...!!!

மூஞ்சிப்புத்தகத்தை மிகவும் நோகடிக்கின்ற விடயம் சங்கம் (குழுக்கள்) அமைத்தல். ஒரு முக்கிய

நிகழ்வொன்றுக்காக நிறுவனம் சார்பாக பிரசித்தமான ஒருவரின் ரசிகர்கள் சார்பாக சங்கம் அமைத்தல் பிழையாகாது. உதாரணத்துக்கு We Wis You Thiruma..., Linux Forum, VettriFM, Shakthi FM, இருக்கிறம், தமிழ் ஒலிபரப்பாளர்கள் குழுமம் எனும் குழுக்களை ஏற்றுக்கொள்கின்றேன் இவைகளின் நோக்கம் தெளிவானது. ஆனால் பின்வரும் சங்கங்களை ஒருமுறை பாருங்கள்.

* பரோட்டா சாப்பிடுவோர் சங்கம்
* பெயரில் "S" எழுத்தினை உடையோர் சங்கம்
* பஸ்ஸிற்கு காசு கொடுக்காதோர் சங்கம்
* காதலுக்கு ஐடியா கொடுப்போர் சங்கம்
* காலையில் ரீ குடிப்போர் சங்கம், குடிக்காதோர் சங்கம்
* profile இல் சொந்தப்படம் போடாதோர் சங்கம்
* சொந்தப்படம் போடாதோரை எதிர்ப்போர் சங்கம்




இப்படி எத்தனையோ...

அப்பப்பா.... மூஞ்சிப்புத்தக தரவு மூலம் (Database) என்ன பாடுபடும் கடவுளே... எந்தவொரு நோக்கமுமின்றி, எழுந்தமான காரணங்களுக்காக கட்டியெழுப்பப்படும் சங்கங்களின் தலைவர்களே நிர்வாகிகளே... உங்களின் சங்கத்தை கலையுங்கள். கோடி புண்ணியம் கிடைக்கும் உங்களுக்கு...

இப்போதெல்லாம் மூஞ்சிப்புத்தகத்தில் பலரும் தங்கள் உள்ளக்கிடக்கைகளை கொட்டித்தீர்க்கின்றார்கள். நான் கூட இதற்கு விதிவிலக்கானவனல்ல. ஆனால் நாங்கள் இட்ட கருத்துக்களை எங்கள் நண்பர்கள் தானே பார்வையிடுகின்றார்கள் என எண்ணுகின்றோம். ஆனால் உங்கள் நண்பர்களின் பெயரில் பலர் உலா வருகின்றார்களாம். சில நிறுவனங்கள் தங்கள் கைங்கரியத்தை கச்சிதமாக நிறைவேற்றுவதாகவும் கேள்வி. உங்களுக்கு உணர்வெழுச்சிகளை ஊட்டியவாறு வருகின்றவர்களை சரியாக அடையாளங்கண்டு கை கோர்த்துக் கொள்ளுங்கள். இது உங்களுக்கும் நல்லது. உங்கள் உடலுக்கும் நன்று....

◀ ஆதிரை ▶



# உறங்கிக் கொண்டி



நான்
உறங்கிக் கொண்டிருக்கிறேன்
என் தூக்கத்தின் கதவுகளை தலையால் முட்டாதீரகள்
ஒரு கையால் வாயைப் பொத்திக் கொள்ளுங்கள்
மறு கையால் கண்ணீரைத் துடைத்துக் கொள்ளுங்கள்
மேலும் கைகள் இருந்தால் கடவுளாகிக் கொள்ளுங்கள்
எனக்கொன்றும் வருத்தமில்லை
நான் உறங்கிக் கொண்டிருக்கிறேன்

வேலு தம்பி வந்தால் என்ன
வில்வரத்தினம் வந்தால் என்ன
தமிழ்ச்செல்வன் வந்தால் என்ன
சிவரமணி வந்தால் என்ன
நான் உறங்கிக் கொண்டிருக்கிறேன்

குண்டுகள் விழட்டும்
தோட்டாக்கள் வெடிக்கட்டும்
தமிழன் உடல் தாறுமாறாய் கிழியட்டும்
தமிழச்சி முலையை நாய் கவ்விச் செல்லட்டும்
நான் உறங்கிக் கொண்டிருக்கிறேன்

நாடுகள் கூடட்டும்
மாநாடுகள் பேசட்டும்
வீடுகள் அற்றவரகள்
காடுகள் சேரட்டும்
தடைகளை போடட்டும்
தவிடு பொடியாக்கட்டும்
எனக்கென்ன
நான் உறங்கிக் கொண்டிருக்கிறேன்

ஜெ.பிரான்சிஸ் கிருபா

நன்றி: உயிர் எழுத்து

# நக்கிறேன்



அவர்கள் சூழட்டும்
கூடி நின்று பதுங்கு குழியில் மோலட்டும்
இறந்து கொண்டிருப்பவர்கள் காயங்களில்
உப்பு எரியட்டும்
அம்மா என்று பிளந்த வாயிலும்
மூத்திரத் துளிகள் உதிரட்டும்
எனக்கென்ன
நான் உறங்கிக் கொண்டிருக்கிறேன்


கிராமம் நகரம் யாவும் மரணம்
என்றான தேசத்தில்
ஒரு பெட்டை நாய்கூட
வாழ அஞ்சுகிற கொடுமையான வீதியில்
இலைகளோ கிளைகளோ
வாய்பொத்திக் கொள்ளும் பொழுது
இரவானால் என்ன பகலானால் என்ன எனக்கு?
நான் உறங்கிக் கொண்டிருக்கிறேன்

சிவகாம சுந்தரியம்மன் நடை திறப்புக் காண
மனசுக்குள்ளேயே போய்க் கொண்டிருக்கிறார்கள்
பவானியும் செல்வியும் மைதிலியும் மதுசூதனனும்
நடை திறந்தால் என்ன மூடினால் என்ன
நான் உறங்கிக் கொண்டிருக்கிறேன்



போர்தான் தேநீர்
போர்தான் சிற்றுண்டி
போர்தான் சோறு
போர்தான் வாழ்வு
போர்தான் மரணம் என்றான நிலத்தில்
தமிழ் நதியாக ஓடட்டும்
கடல் மணியாக ஒலிக்கட்டும்
எனக்கென்ன நான் உறங்கிக் கொண்டிருக்கிறேன்

விழிக்கும்போது
என் கல்லறை வெடிக்கும் ஓசையை
காதுள்ளவர்கள் கேட்கலாம்
கண்ணுள்ளவர்கள் பார்க்கலாம்



கேர்ணல் ஆர். ஹரிஹரன் (ஓய்வு)

# விரும்பாத போரின் வேண்டாத நினைவுகள்

**இவர்தான் நமது மகனைக் கொன்ற ராணுவ அதிகாரி. என்று என்னை சுட்டிக்காட்டி தன்னுடைய மனைவிக்கு அந்த நடுத்தர வயது மனிதர் அறிமுகப்படுத்தினார். என்னுடன் இருந்த என் மனைவியோ அதிர்ச்சியடைந்தார். ஆனால் அந்த மனிதரின் வலியை அறிந்திருந்த நான் அமைதியாக இருந்தேன். 1989/=ல் சென்னையில் என் வீட்டில் நடந்த சம்பவம் இது.**

அந்த தம்பதியினரை யாழ்ப்பாணத்தில் இருந்தபோது எனக்கு நன்றாகத் தெரியும். ஒகஸ்ட் 5 /1987 ல் நான் இந்திய அமைதிப்படையின் சார்பாக யாழ்ப்பாணத்தின் செம்மண்ணில் காலடி வைத்தபோது அவர்கள் வீட்டுக்குத்தான் முதலில் சென்றேன். அவருடைய 18 வயது மகனும் அங்கிருந்தான். அந்த அழகான இளைஞன் விடுதலைப் புலிகளின் இயக்கத்தைச் சேர்ந்தவன். யாழ்ப்பாணத்தில் அவர்களை 'பொடியன்கள்' என்று அழைப்பார்கள்.

சில மாதங்கள் கழித்து எதிர்பாராதவிதமாக புலிகளுடன் போர் தொடங்கியது. அந்தப் பொடியன் எங்கள் படையுடன் போரிட மன்னாருக்குச் சென்றுவிட்டதாக அறிந்தேன். எனவே நான் படையினரிடம் அந்த இளைஞனை உயிரோடு பிடியுங்கள் சுட்டுவிடாதீர்கள் என்று கூறியிருந்தேன். அவன் சயனைட் குப்பியைக் கடித்து இறந்துவிடலாம். அதற்கு இடம்கெடுக்காதீர்கள் என்றும் எச்சரித்திருந்தேன். ஆனால் அது நடந்ததென்னவோ வேறு.

தாக்குதலின்பேது நமது படையினர் அவனை அணுகுவதற்கு முன்பே அவன் சயனைடு குப்பியைக் கடித்து இறந்து போய்

விட்டான். இச்சம்பவத்தை துக்கத்தில் ஆழ்ந்திருக்கும் அவனது தந்தையிடம் நான் எப்படி விவரிப்பது? இலங்கையில் ராணுவ உளவுப்பிரிவு தலைவராக மூன்று ஆண்டுகள் நான் இருந்தபேது கண்ட நூற்றுக்கணக்கான சம்பவங்களில் அந்த



இளைஞனின் மரணமும் ஒன்று. அவையெல்லாம் என்னை துயரடையச் செய்தன. ஒரு தமிழனான எனக்கு தெழில்ரீதியாக அங்கு பணிபுரிவது எளிதாக இருந்தது. ஆனால் போரில் அப்பாவித் தமிழர்கள் சாவதை தினமும் பார்ப்பது உளரீதியாக பெரும் சித்திரவதையாக இருந்தது. அந்தத் துயரான அனுபவங்கள் எனக்குள் ஆழமான காயங்களை ஏற்படுத்தின. தமிழர்கள் பெரும்பான்மை சிங்களவர்களுக்கு எதிராக தங்கள் உரிமைகளைப் பெற நடத்திவரும் பேராட்டத்தை நான் ஆதரிக்கிறேன். ஆனால் ஆயுதம் ஏந்திப் பேராடுவதை நான் ஏற்றுக்கெள்ளவில்லை.

இலங்கைக்கு நான் இந்திய ராணுவத்துடன் சென்றது எதிர்பாராமல் நிகழ்ந்த சம்பவம். அந்த காலகட்டத்தில் உளவுத்துறையில் இருந்த தமிழ் அதிகாரிகளில் நான்தான் சீனியர் என்பதால் அனுப்பப்பட்டேன். என்னுடைய உறவினர் சிலர் யாழ்ப்பாணத்திலும் கொழும்பிலும் இருந்து வந்தவர்கள். எனவே தமிழர் பிரச்சினையைப் பற்றி எனக்கு நன்றாகவே தெரிந்திருந்தது.

இந்திய இலங்கை ஒப்பந்தம் அவசரத்தில் உருவாக்கப்பட்டு நீண்டகால குறிக்கோள் இல்லாமல் செயல்படுத்தப்பட்டது. அதற்கு இரண்டு குறிக்கோள்கள் இருந்தன. அவை:



இந்தியாவின் பாதுகாப்பு நலன்களைக் காப்பது அத்துடன் இலங்கைத் தமிழர்களுக்கு நியாயமாகக் கிடைக்க வேண்டிய உரிமைகளை அந்நாட்டு ஒருமைப்பாட்டிற்கு

கேடு நேராத வகையில் பெற்றுத் தருவது. இவை அரசியல் ரீதியான ராஜதந்திர ரீதியான குறிக்கோள்கள்.

அவற்றுக்கு ராணுவப் பின்னணி கிடையாது. இந்திய அமைதிப்





Indian Troops waiting to board a MI-8 equipped with rocket pods for an assault mission in Jaffna

படைக்கு எழுத்துமூலமாக எந்தவித மான ஆணையும் அரசால் வழங் கப்படவில்லை. வந்த உத்தரவுகளும் வாய்வழியாகவே வந்தன. அவற் றில் சில உத்தரவுகள் நமது குறிக் கோள்களையும் மீறி இருந்தன. அதில் ஒன்று இந்த ஒப்பந்தத்தை விரும்பாத சிங்களவர்கள் மற்றும் இலங்கை ராணுவத்திடமிருந்து எதிர்ப்பு வந்தால் இலங்கை அதிபர் ஜெய வர்த்தனவைப் பாதுகாப்பதற்கும் தயாராக இருக்கவேண்டும் என்பது!

ஒகஸ்ட் 2 1987 ல் சென்னைக்கு நான் வந்தபேது தென்பிராந்திய கமாண்டர் லெப்டினெண்ட் ஜென ரல் தீபிந்தர் சிங் இந்தியப் படை யினரேடு இலங்கை செல்வதற்கு தயாராக இருக்குமாறு என்னிடம் கூறினார். “தமிழ்ப் பேராளிகளிடமி ருந்து ஆயுதங்களைத் திரும்பப்பெற இந்தியப் படையினரின் உதவியை இலங்கை நாடியிருந்தது. அங்கு

நீங்கள் மூன்று நாட்களுக்கு இருக்கவேண்டும் என்று நான் நினைக்கிறேன். சரியாக தெரியவில்லை.

குறிப்பாக என்ன செய்ய வேண்டும் என்ற விபரங்கள் எதுவும் வரவில்லை. மற்றவர்களைப் பேலவே பிரபாகரனும் ஆயுதங்களை ஒப்படைப்பார் என்று நினைக்கிறேன்" என்று அவர் கூறினார். மூன்று நாள் கழித்து இரண்டே இரண்டு யூனிபார்ம்களுடன் நான் யாழ்ப்பாணம் பேய்ச் சேர்ந்தேன். ஜெனரல் தீபிந்தர்

உருவாக்கும் குறிக்கோளையும் கைவிடவில்லை. நானே இந்தியாவுக்குத் திரும்பிவர மூன்று ஆண்டுகளாகிவிட்டது. நாம் இலங்கைக்குச் செல்வதற்கு முன்பு இருந்த தயார் நிலையின் லட்சணம் இதுதான்!

"முதல் இரண்டு மாதங்கள் அமைதியாக கழிந்தன. வடகிழக்கு மாகாணத்துக்கு அமைக்கப்பட்ட இடைக்கால நிர்வாகத்தை ஏற்றுக் கொள்வதிலும் ஆயுதங்களை ஒப்படைப்பதிலும் புலிகள் இழுபறி



சிங்கின் இரண்டு எதிர்பார்ப்புகளுமே பொய்த்துவிட்டன.

பிரபாகரன் ஒப்பந்தத்தை முழுமையாக ஏற்றுக்கெள்ளவில்லை. அத்துடன் சுதந்திர தமிழ் ஈழத்தை

செய்துகொண்டிருந்தார்கள். அவர்களால் பிரச்சினை உருவாகலாம் என நான் உணர்ந்தேன். நான் இலங்கையில் காலடி வைத்த உடனேயே எங்கள் குடும்ப நண்பரும் ஜெயவர்த்

தனவிடம் பணிபுரிந்திருந்தவரு மான ஓய்வு பெற்ற அரசு அதிகாரி ராஜேந்திராவைச் சென்று சந்தித் தேன். அவர் என்னிடம் ராஜீவ்காந்தி



அரசியலில் ஒரு குழந்தை. மகா தந்திரசாலியான ஜெயவர்த்தன ராஜீவை தூக்கிச் சாப்பிட்டுவிடு வார். வரும் அக்டோபரில் உங் களை புலிகளை எதிர்த்து மோத வைப்பதுதான் அவரது திட்டம் என்று எச்சரித்தார். இதை புது டெல் லிக்கும் நான் தெரிவித்திருந்தேன். தன்னுடைய கணிப்பு உண்மையாவ தைப் பார்க்க ராஜேந்திரா உயி ரோடு இல்லை. போர் தொடங்கிய முதல் வாரத்திலேயே தன் வீட்டுக்கு அருகில் வெடித்த குண்டுக்கு அவர் பலியாகிவிட்டார்.

புலிகளின் இளம் தலைவர்களில் ஒருவரான திலீபன் செப்டம்பர் 15 /1987 இல் ஒப்பந்தத்தை அமல் படுத்துவதில் இந்தியாவின் குறை பாடுகளை எதிர்த்து சாகும் வரை உண்ணாவிரதத்தை தொடங்கிய போதுதான் பிரச்சினை பெரிதா னது. இந்தியாவுக்கு எதிரான கண் டனப் பேராட்டங்களை புலிகள் யாழ்ப்பாணம் முழுக்க நடத்தினார் கள். புது டெல்லி இந்த சிக்கலைக் கண்டுகெள்ளவில்லை. இந்திய ராணுவத்திடமே இந்த அரசியல் ராஜதந்திரப் பிரச்சினையைச் சமா ளிக்கும் பொறுப்பை விட்டுவிட் டது. உண்ணாவிரதத்தைக் கைவி டாத திலீபன் செப்டம்பர் 26, 1987 இல் மரணமடைந்தார். ஏற்கனவே மோசமாகி வந்த எங்கள் உறவு மேலும் கசப்படைந்தது.



இந்நிலையில் நடந்த இன்னெரு முக்கியமான சம்பவத்தால் மேலும் இக்கட்டுகள் உருவாயின.

*அடுத்த இதழில் தொடரும்*

# கம்பஸ் வழி கீதா(வின்) சாரம்

எதை நீ படித்தாய்
மறந்து போவதற்கு

எதை நீ புரிந்து கொண்டாய்
கேள்விகள் புரிவதற்கு

என்று நீ ஒழுங்காய் வந்தாய் - கம்பஸில்
வருகை குறையாமல் இருப்பதற்கு

எந்த ஐட்டத்தை நீ காதலித்தாயோ
அவளிடமே நீ செருப்படி வாங்குவாய்

எந்த ஐட்டத்தை நீ மகா மட்டமாக திட்டுவாயோ
அவளிடமிருந்தே காதல் கடிதம் பெறுவாய்

எந்த ஐட்டம் இன்று உன்னுடையதாயிருக்கிறதோ
அது நாளை மற்றொருவனுடையதாகிறது
மற்றொரு நாள் அது வேறொருவனுடையதாகிவிடுகிறது

இதுவே கம்பஸ் நியதியும்
ஐட்டங்களின் குணாம்சமும்.



தார்மீகன்
யாழ் பல்கலைக்கழகம்




டொக்டர். என். கே. முருகானந்தன்

# பெண்ணே உன்கதி இதுதானா?

## மாதவிடாய் நிற்றலை முன்நிறுத்தி

அந்தப் பெண் பயந்தடித்துக் கொண்டு ஓடி வந்தாள். மாதவிடாய் வர வேண்டிய தினத்துக்கு வரவில்லையாம். 10 நாட்கள் பிந்திவிட்டதாம். பிள்ளைகள் வளர்ந்து விட்டார்கள். தங்கினால் வெட்கக் கேடு.

இன்னொரு பெண்ணின் பிரச்சனை மிகவும் அந்தரங்கமானது. கணவனுடன் சேரந்திருக்க விருப்பமுள்ள போதும் சேர்ந்திருக்கும் போது அவளுக்கு முடிவதில்லை. சற்று வேதனை. பொறுத்துக் கொண்டாலும் கணவனுக்கு இதமாக இல்லை என அதிருப்திப்படுகிறாள்.





மற்றொருத்திக்கு மேலெல்லாம் எரிவு, படபடப்பு, பதற்றம், சினம் காரணம் சொல்ல முடியாத வியர்வை, உடல் உழைவு. இவர்களுக்கெல்லாம் என்ன பிரச்சனை? இவர்கள் வயது 50க்கு சற்று கூட அல்லது குறைய. மாதவிடாய் முற்றாக நிற்பதோடு சம்பந்தப்பட்ட பிரச்சனைகள். முதற் பெண்ணுக்கு சிறுநீரப் பரிசோதனை செய்தபோது கர்ப்பம் தங்கவில்லை என்பது உறுதியாகிற்று. மாதவிடாய் முற்றாக நிற்பதற்கு முந்தைய காலங்களில் இவ்வாறு பிந்தி வருவது சகசம். நாற்பது வயதை அண்டிய காலங்களிலேயே மாதவிடாய் குழப்பங்கள் சிலரில் ஆரம்பித்து விடும். ஆரம்பத்தில் 8 நாள், 10 நாள் என முந்தி முந்தி வரும். ஆயினும் நாட் செல்லச் செல்ல பிந்தத் தொடங்கும். 10, 15 நாட்கள் என ஆரம்பித்து 23 மாதத்திற்கு ஒரு தடவையென தாமதமாவதுண்டு. ஆனால் எல்லோருக்கும் அப்படித்தான் நடக்கும் என்று சொல்ல முடியாது. திடீர் என எவ்வித ஆர்ப்பாட்டம் இன்றி

நின்று விடுவதும் உண்டு. மோசமாக நிலையில் குருதி இறைத்து சத்திர சிகிச்சை வரை போவதும் உண்டு. எவ்வாறாயினும் 50 வயதுக்கு உட்பட்ட பெண்களில் 24 மாதங்களுக்கும் 50 வயதுக்கு மேற்பட்ட பெண்களில் 12 மாதங்களுக்கும் தொடர்ந்து வராதிருந்தால் மட்டுமே மாதவிடாய் முற்றாக நின்று விட்டதென நிச்சயமாகக் கூறலாம். சாத்தியங்கள் குறைவாயினும் அதுவரை கரு தங்காது என அறுதியாகக் கூறமுடியாது. இவ்வயதில் கருத்தடை முறையாக ஆண் உறை பாவிப்பது பொருத்தமாக இருக்கும்.

இரண்டாவது பெண்ணுக்கு மாதவிடாய் முற்றாக நின்றுவிட்டதால் உறுப்பின் மென்சவ்வுகள் முதிர்ந்து அவளது பிறப்புறுப்பு சற்று இறுகிவிட்டது. அத்துடன் அதற்கு ஈரலிப்பையும் வழுவழுப்பையும் தரும் சுரப்பிகளின் செயற்பாடு குறைந்ததால் வரட்சியாகிவிட்டது. இதனாலேயே உறவு சுகமாக இருக்கவில்லை. இதற்காக கணவனும் மனைவியும் கடுகடுப்பாகி சினத்துக்கொண்டிருக்க வேண்டியதில்லை. வரட்சியையும் இறுக்கத்தையும் தணிக்கக் கூடிய கிறீம் வகைகள் இருக்கின்றன. இவற்றை உபயோகிப்பதின் மூலம் குடும்ப வாழ்வில் மீண்டும் வசந்தம் வீச வைக்கலாம்.

மூன்றாவது பெண்ணுக்கு ஏற்பட்ட வியர்வை, பதற்றம் படபடப்பு தூக்கக் குறைவு முதலானவை மாதவிடாய் நிற்கும்போது நிகழும் ஹோர்மோன் குறைபாடுகளால் ஏற்படுவது. நோயாளிக்கு மிகுந்த துன்பத்தைக் கொடுக்கும் இவ்வறிகுறிகள் வீட்டில் உள்ள ஏனையவர்களால் பொதுவாக உணரப்படாதவை. என்ன சின்ன விசயங்களுக்கெல்லாம்



பெரிய ரகளை பண்ணுகிறா என எண்ண வைக்கும். தினசரி உடற்பயிற்சி தியானம் சுவாசப் பயிற்சி குளிர்ச்சியான சூழல் போன்றவை இவ்வறிகுறிகளைத் தணிக்க உதவும். சில கிழங்கு வகைகளிலிருந்து பெறப்படும் இயற்கை பொருட்கள் அவ்வறிகுறிகளைத் தணிக்கின்றன. முடியாத போது ஹோர்மோன் மாத்திரைகளை சில காலம் உட்கொள்ள வேண்டு வரலாம்.

மாதவிடாய் முற்றாக நிற்றல் என்பது ஒரு நோயல்ல. வாழ்க்கைச் சக்கரத்தின் தவிர்க்க முடியாத ஒரு பகுதி. ஆயினும் அதன் போது ஏற்படும் உடல் ரீதியானதும் உளரீதியானதுமான பல மாற்றங்கள் சில பெண்களுக்கு மிகுந்த துன்பத்தை அளிக்கின்றன. மேற்கூறிய மாற்றங்களைத் தவிர சிறுநீரகம் சம்பந்தமான சில பிரச்சனைகளும் மிகுந்த இடைஞ்சலை ஏற்படுத்துகின்றன. அடிக்கடி சிறுநீர் கழித்தல் இரவில் இதற்காக அடிக்கடி எழும்புவதால் தனதும் வீட்டில் உள்ளவர்களினதும் தூக்கத்தையும் குழப்பல் சிறுநீரை அடக்க முடியாமல் தன்னிச்சையின்றிச் சிந்துதல் இருமும்போதும் தும்மும் போதும் முக்கும்போதும் தன்னையறியாது சிறுநீர் சிந்துதல் போன்றவை சில்லறைப் பிரச்சனைகள் போல் தோன்றினாலும் நோயாளிக்கும் வீட்டினருக்கும் சிரமங்களையும் மன விரிசல்களையும் ஏற்றபடுத்தக் கூடியளவு சிக்கலானது என்பதைப் புரிந்துகொள்ள வேண்டும்.

எலும்புத் தேய்வு, இருதய நோய்கள் போன்ற வேறு சில பாதிப்புகளும் மாதவிடாய் முற்றாக நின்ற பின் பெண்களுக்கு வருவதற்கான சாத்தியங்கள் அதிகம். வயதாகிவிட்டது. என்ன செய்வது? போறமட்டும் இவற்றையெல்லாம் பொறுத்துக் கொள்ள வேண்டியதுதான் என விரக்தியோடு வாழ வேண்டியதில்லை. பெண்ணாய்ப் பிறந்த பாவம் என கழிவிரக்கம் கொள்ள வேண்டியதில்லை. நீங்களும் மற்றவர்கள் போல மகிழ்வோடு வாழலாம். வசந்தங்கள் மீண்டும் வரும். இவற்றைக் குணமாக்க மருத்துவம் இருக்கிறது. ஒரு சிலவற்றை முற்றாகக் குணமாக்க முடியாவிட்டாலும் பிரச்சனைகளின் தாக்கங்களைத் தணித்து நலமாகவும் மகிழ்வாகவும் வாழ வழிகள் இருக்கவே செய்கின்றன. நீங்கள் செய்ய வேண்டியது ஒன்றுதான். தயக்கத்தை விட்டு உங்கள் பிரச்சனைகளை மருத்துவருடன் வெளிப்படையாகக் கலந்துரையாடுங்கள். வெளிப்படையாக என்பதை என்பதை கவனத்தில் கொள்ளுங்கள்.

# மார்ச் 08 இல்

# சர்வதேச மகளிர் தினம் கொண்டாடுவது ஏன்?


மகளிர்தின சிறப்புக் கட்டுரை

**அது** என்ன மகளிர் தினம்? மார்ச் 08 ஆம் திகதிக்கும் மகளிருக்கும் என்ன சம்பந்தம் என்று நீங்கள் சில வேளைகளில் நினைக்கக்கூடும். உழைக்கும் கீழ் தட்டுப் பெண்கள் வர்க்கமே அறிந்து கொள்ளாத தினமாகத்தான் இந்தப் பெண்கள் தினம் இன்றும் இருக்கிறது.

சர்வதேசப் பெண்கள் தினம் என்று ஒருநாள் வருவதற்குக் காரணமே இந்த உழைக்கும் பெண் வர்க்கம் தான் என்பது தங்கமுலாம் பூசப்படாத உண்மை!

மார்ச் 8 என்றால் சர்வதேச மகளிர் தினம் என்று நாமனைவரும் அறிவோம். ஆனால் எதற்காக மார்ச் எட்டாம் திகதியைக் குறிப்பாக தேர்ந்தெடுத்தார்கள்? சற்று வரலாறுகளில் பின்னோக்கித் தேடினால் வியப்பூட்டும் பல தகவல்கள் நமக்குக் கிடைக்கும்.


1789 ஆம் ஆண்டு ஜூன் 14 ஆம் திகதி சுதந்திரத்துவம், சமத்துவம் ,பிரதிநிதித்துவம் (அரசனின் ஆலோசனை குழுக்களில்) என்று கோரிக்கைகளை முன்வைத்து பிரெஞ்சுப் புரட்சியின் போது பாரிஸில் உள்ள பெண்கள் போர்க்கொடி உயர்த்தினர்! ஆணுக்கு நிகராக பெண்கள் இந்தச் சமுதாயத்தில் உரிமைகள் பெற வேண்டும் என்றும் வேலைக்கேற்ற ஊதியம் எட்டு



அ→

**இவற்றின் மூலம் உங்கள் போன் குறித்த சில அடிப்படைத் தகவல்களை அறியலாம். பிரச்சனை இருக்கும் பட்சத்தில் இவை உங்களுக்கு பிரச்சனையின் தன்மையை அறிய உதவும்.**

| | |
|---|---|
| *#3283# | -phone தயாரான தேதியை அறிந்து கொள்ள |
| *#746025625# | - SIM கடிகாரத்தை நிறுத்த |
| *#67705646# | - Operator Logo it நிறுத்த |
| *#73# | - Games Score மற்றும் Phone Timer யை Reset செய்திட |
| *#0000# or *#9999# | - Mobile Software பதிப்பு குறித்து அறிய |
| *#92702689# | - Mobile Warrenty குறித்த Setting அறிய (Serial No, எங்கு தயாரானது, வாங்கப்பட்ட தேதி, Repair செய்த தேதி ,போன் இன்னும் எவ்வளவு நாட்களுக்கு தாங்கும் போன்ற தகவல்கள்) |




மணிநேர வேலை, பெண்களுக்கு வாக்குரிமை, பெண்கள் பெண்ணடிமைகளாக நடத்தப்படுவதிலிருந்து விடுதலை வேண்டும் என்று பெண்கள் கிளர்ச்சிகளில் ஈடுபட்டனர்! கிளர்ச்சிகள் என்றால் அதன் தீவிரம் புரிவதற்காக அடுப்பூதும் பெண்கள் இடுப்பொடியப் பாடுபடும் பெண்கள் கையில் கிடைத்த ஆயுதங்களைக் கையில் எடுத்துக்கொண்டு பாரிஸ் நகரத் தெருக்களில் அணி திரண்டனர்.

புயலாகக் கிளம்பிய பாவையரை துரும்பாக எண்ணிய அந்நாட்டு

# Nokia Phone களுக்கான ரகசிய Code எண்கள்

| | |
|---|---|
| *# 06# | - மொபைலின் அடையாள எண்ணை அறிந்து கொள்ள |
| #7760# | - தயாரிப்பு வரிசை எண்ணை அறிய |
| #bta0# | - Bluetooth make Address தெரிய |
| #2640# | - மொபைல் போனின் Security Code குறித்து அறிய. |
| #7328748263373738# | - போனில் பதிந்து தரப்பட்டிருக்கும் Default Security Codeகுறித்து அறிய |
| #43# | - Call Waiting நிலை குறித்து அறிய. |
| #2820# | - Bluetooth தகவல் தெரிந்து கொள்ள. |
| #7370# | - Mobile phone Memory யை format செய்திட |
| #delset## | - GPRS மற்றும் email Setting அமைப்பினை அழித்திட. |
| #pw+1234567890+1# | - மொபைல் செட்டின் Lock Status குறித்து தெரிந்து கொள்ள. |
| #pw+1234567890+4# | - உங்கள் SIM Cardஇன் Lock Status குறித்துத் தெரிந்து கொள்ள. |
| *#7780# - | -Factory Settings ஐ போனில் மீண்டும் அமைக்க. |

அரசன் இடியென முழங்கி "இவர்களை என் அதிகாரம் கொண்டு அடக்குவேன்" என்றும் "ஆர்ப்பாட்டத்தில் ஈடுபடுவோரைக் கைது செய்வேன்" எனவும் அறிவித்தான்.

ஆயிரக்கணக்கான பெண்கள் கூட்டம்! அவர்களுக்கு ஆதரவாக ஆண்களும் ஆயிரக்கணக்கில் கலந்து கொள்ள உற்சாகம், கரைபுரள, கோஷங்கள் வானைப் பிளக்க, அரசமாளிகை நோக்கி ஊர்வலம் கொட்டும் மழையில் ஊர்ந்து சென்றது! அரசமாளிகை முன்பு ஆர்ப்பாட்டத்தில்

ஈடுபட்ட அனைவரையும் கைது செய்வோம் என்று மிரட்டிய அரசனின் மெய்க்காப்பாளர் இருவரையும் திடீரென கூட்டத்தினர் பாய்ந்து தாக்கிக் கொன்றனர்.


இதை எதிர்பாராத அரசன் அதிர்ந்து போனான். கோரிக்கைகளை கண்டிப்பாக பரிசீலிப்பேன். உங்களுக்குச் சாதகமாக அறிவிப்பேன் என்று ஆர்ப்பாட்டத்தில் கொதித்தெழுந்தவர்களைச் சமாதானப்படுத்தினான். இயலாது போகவும் அரசன் லூயிஸ் பிலிப் முடிதுறந்தான். இந்தச் செய்தி ஐரோப்பிய நாடுகளில் வேகமாகப் பரவிட அங்கும் பெண்கள் போராட்டங்களில் ஈடுபட்டனர்!

தொடர்ந்து கிரீஸில் லிசிஸ்ட்ரடா தலைமையில் ஜெர்மனி ஆஸ்திரியா டென்மார்க் நாடுகளைச் சேர்ந்த பெண் பிரதிநிதிகள் கலந்து கொண்டு தொடர் போராட்டங்களில் ஈடுபட ஆளும் வர்க்கம் அசைந்து கொடுக்கத் தொடங்கியது.

இத்தாலியிலும் பெண்கள் இது தான் சமயம் என்று தங்களது நீண்ட நாள் கோரிக்கையான வாக்குரிமையைக் கேட்டு ஆர்ப்பாட்டங்களில் இறங்கினர்.

பிரான்சில் புருஸ்ஸியனில் இரண்டாவது குடியரசை நிறுவிய லூயிஸ் பிளாங்க் பெண்களை அரசவை ஆலோசனைக் குழுக்களில் இடம் பெறச் செய்யவும் பெண்களுக்கு வாக்குரிமை அளிக்கவும் ஒப்புதல் கொடுத்தான். அந்த நாள் *1848* ஆம் ஆண்டு மார்ச் *8* ம் நாளாகும்! அந்த மார்ச் *8* ஆம் நாள்தான் மகளிர் தினம் உலகெங்கும் அமைய ஒரு வித்தாக அமைந்தது.

அமெரிக்காவின் தொழிற்புரட்சி நகரம்தான் நியுயோர்க். இங்கு நெசவுத் தொழிலில் பெருமளவு பெண்கள் ஈடுபட்டிருந்தனர். இவர்கள் பதினாறு மணிநேரம் வேலை செய்து மிகக் குறைவான ஊதியத்தைப் பெற்றனர். அந்த ஊதியத்தைப் பெறுவதற்குக் கூட நிர்வாகத்தில் உள்ளவர்களின் உடற்








பசிக்கு இணங்கினால் தான் கிடைக்கும் என்ற நிலை இருந்தது.

1857 இல் நியுயோர்க் நகரில் உழைக்கும் பெண்கள் கூடி குரல் எழுப்பினர். பெண்களின் முதல் குரல் ஒலிக்கத் தொடங்கிய பொன்னாள் அது. தொடர்ந்து போ-ராட்டங்கள் பெண்கள் அமைப்புகள் தோன்றின.

1908 இல் வாக்குரிமை கேட்டுக் கொதித்து எழுந்தனர். ஜனாதிபதி தியோடர் ரூஸ்வெல்ட்டே போராட்டத்தின் தாக்கம் கண்டு குலைந்து போனார். போராடினால் தான் உரிமைகள் கிடைக்கும் என்ற சிந்தனை உலகெங்கும் கிளர்ந்தெழுந்தது. அதன் விளைவு 1910 இல் ஹேகனில் சர்வதேச பெண்கள் மாநாடு கிளாரா தலைமையில் கூடியது.

அதன் தொடர்பாக சர்வதேச மகளிர் அமைப்பு தோற்றுவிக்கப்பட்டது. இந்த அமைப்பின் சார்பில் 1911 ஆம் ஆண்டு மார்ச் 19 ஆம் திகதி ஜேர்மனி ஆஸ்திரியா டென்மார்க் மற்றும் சில ஐரோப்பிய நாடுகளிலிருந்து வந்து கலந்து கொண்ட மகளிர் பிரதிநிதிகளின் முதல் சர்வதேச மகளிர் தினத்தைக் கொண்டாடினர். இந்தக் கூட்டத்தில் தான் அரசன் லூயிஸ் பிளாங்க் பெண்களுக்கு வாக்குரிமை அளிக்க ஒப்புதல் அளித்த நாளான மார்ச் 8 ஐ நினைவு கூரும் வகையில் ஒவ்வொரு ஆண்டும் மார்ச் 8 ஆம் நாளை சர்வதேச மகளிர் தினமாகக் கொண்டாட முடிவு செய்து தீர்மானம் நிறைவேற்றினர்!

இந்த மாநாட்டில் கலந்து கொண்டு திரும்பிய பெண்கள் ஜேர்மனியில் பெண்கள் வாக்குரிமை கேட்டு மில்லியன் துண்டுப் பிரசுரங்களை நாடெங்கும் விநியோகித்தனர்.

ஜெர்மனியில் மகளிர் தொடக்கி வைத்த போராட்டங்கள் ஆர்ப்பாட்டங்கள் உலகெங்கும் மகளிர் தங்கள் பிரச்சினைகளுக்காக போராட வேண்டும். போராடினால் தான் உரிமைகளைப் பெற முடியும் என்று எண்ணத் தலைப்பட்டு போராடத் தொடங்கினர்!


அன்று தொடங்கிய போராட்டம் இன்றும் பல விதங்களில் தொடர்ந்து கொண்டிருக்கிறது. காலத்தின் தேவைக்கேற்ப மகளிர் தங்களின் சவால்களை முன்வைத்துப் போராடி வருகின்றனர்!-

சந்திரவதனா செல்வகுமாரன்

எகிப்தின் பரோ பேரரசர்கள் உலகத்தின் நின்று நிலைக்கும் பெரிய கிஜா பிரமிட்களைக் கட்டினார்கள். 1000 வருடம் நின்று நிலைத்த இந்த சமுதாயம், மத்திய அதிகாரம் திடீரென நொறுக்கியது. அடுத்த 100 வருடங்களுக்கு நாடு குழப்பத்தில் ஆழ்ந்திருந்தது.

# எகிப்தை அழித்த இயற்கை

என்ன நடந்தது? ஏன் நடந்தது என்பது இன்னும் விவாதத்துக்குரியதாக இருக்கிறது. இந்த மர்மத்தை விடுவிக்க விரும்பிய லண்டன் பல்கலைக்கழகக் கல்லூரியில் பேராசிரியராக பணிபுரியும் ஃபெக்ரி ஹாஸன் அதற்குத் தேவையான அறிவியல் தடங்களைத் தேடிய போது




யாத்ரா

சில அதிசயக்கத்தக்க ஆச்சரியமான தகவல்களை பெற்றிருக்கிறார்.

அன்க்டிஃபி என்ற பிராந்திய ஆளுனருக்காக பழங்காலத்தில் கட்டப்பட்ட தெற்கு எகிப்தில் இருக்கும் சிறிய கல்லறையில் ஹிரோகிலிஃபிக்ஸ் எழுத்துக்களில் எழுதியிருந்த ஒரு விடையம் இவருக்கு மிகுந்த ஆர்வத்தை உண்டுபண்ணியிருக்கிறது. அதாவது,

"வடக்கு எகிப்தில் எல்லோரும் பசியில் இறந்து கொண்டிருக்கிறார்கள். அவர்கள் தங்கள் குழந்தைகளையும் கொன்று தின்கிறார்கள்" என்று எழுதப்பட்டிருந்தது. பல எகிப்து நிபுணர்களால், "மிகைப்படுத்தப்பட்டது" என்றும் "கற்பனை" என்றும் ஒதுக்கப்பட்ட இந்த வரிகளை உண்மை என்றும் நிச்சயமாக நடந்தது என்றும் ஃபெக்ரி நிறுவ முனைகிறார். இத்தகைய சோகத்தை உருவாக்கும் ஒரு காரணியையும் அவர் கண்டறிய முயற்சித்தார்.

"எகிப்தியர்கள் வாழ்ந்த சூழ்நிலையில் ஏதேனும் ஒரு காரணம் இருக்க வேண்டும் என ஆரம்பத்திலிருந்து நினைத்தேன்" என்று கூறுகிறார். எகிப்திய வாழ்க்கைக்கு இதயமாக இருந்த நைல் நதியிலேயே இதற்கான காரணம் இருக்க வேண்டும் என்றும் இவர் நினைத்தார். 7 ஆம் நூற்றாண்டிலிருந்து சரியாக குறிக்கப்பட்டிருக்கும் நைல் நதி வெள்ளங்கள் பற்றிய ஆவணங்களை ஆராய்ந்தார். ஒவ்வொரு வருடமும்




வரும் நைல் நதி வெள்ளம் அளவில் வருடாவருடம் மாறுபடுவதையும் கண்டார். இந்த வெள்ளங்களே நிலத்தில் விவசாயம் செய்ய பயன்படுகின்றன.

பக்கத்து இஸ்ரேலில் கண்டறியப்பட்ட புதுக் கண்டுபிடிப்பு இவருக்கு திடீரென உதவியது. அகழ்வாராட்சி துறையில் பணிபுரியும் பார் மாத்யூஸ் என்பவர் டெல்அவீவ் நகரத்துக்கு அருகில் இருக்கும் குகைகளில் இருக்கும் ஸ்டாலசைட், ஸ்டால்கமைட் தூண்கள் பழங்காலத்தின் தட்பவெட்பம் பற்றிய ஆவணங்களாக இருப்பதைக் கண்டறிந்தார். ஸ்டாலசைட் என்பது குகையின் மேலிருந்து வழியும் சுண்ணாம்புத் தூண். ஸ்டால்கமைட் என்பது, சுண்ணாம்பு குகையின் தரையில் கொட்டுவதால் உருவாகும் தூண். மேலே இருக்கும் தூணும் கீழே உருவாகும்

தூணும் மெல்ல மெல்ல வளர்ந்து இணையும். இந்த சுண்ணாம்பு வழிவது அங்கிருக்கும் தட்பவெப்பத்தைப் பொறுத்தது. இவைகளை ஆராயும் போது, கி.மு 2,200 வருடத்தில், மழை திடீரென 20 சதவீதம் குறைந்திருப்பது தெரிந்தது. கடந்த 5,000 வருடங்களில் மிகக்குறைந்த மழையளவைக் கொண்டதாக இது அமைந்திருந்தது.

இஸ்ரேலும், எகிப்தும் வெவ்வேறு தட்பவெட்பங்களை கொண்டவை. எனவே ஃபெக்ரிக்கு உலகம் முழுவதும் நடந்திருக்கக்கூடிய தட்பவெட்ப நிகழ்ச்சியாக அது இருக்க வேண்டும் எனப்பட்டது. அப்படிப்பட்ட உலகளாவிய தட்ப வெப்ப நிகழ்ச்சியாக இருந்தால் மட்டுமே அது எகிப்தின் பழைய மன்னராட்சியையும் பாதித்திருக்கும். அப்படிப் பட்ட ஒரு தடயமும் அவருக்குக் கிடைத்தது. கொலம் பியா பல்கலைக்கழகத்தின் லாமாண்ட் - டோஹர்டி பூமி ஆராய்வகத்தில் பணியாற்றும் அகழ்வாராட்சி நிபுணர் ஜெரார்ட் பாண்ட் ஐஸ்லாந்தின் கடலில் மிதக்கும் பனிக்கட்டி மலைகளை ஆராய்ந்தார். தெற்கு நோக்கிய இவைகளின் பிரயாணத்தில் அவை சில எரிமலை சாம்பலை கடலின் அடியில் விட்டுச் சென்றதை அவர் கண்டு பிடித்தார். முழு அளவு உருகுவதற்கு முன்னர் அவை எவ்வளவு தூரம் பயணம் செய்திருக்கின்றன என்பதை வைத்து அந்த வருடம் எவ்வளவு எவ்வளவு குளிராக இருந்திருக்கிறது என்று கண்டறியலாம்.

அது போலவே கடலடியில் இருக்கும் மண்ணை நேராக தோண்டி பரிசோதனை செய்வதன் மூலம், எந்த வருடம் எவ்வளவு குளிராக இருந்திருக்கிறது என்றும் ஆராயலாம். ஐரோப்பாவில் ஒவ்வொரு 1,500 வருடங்களுக்கும் ஒரு முறை சின்ன பனியுகம் வருகிறது என்று கண்டறிந்தார். ஒவ்வொரு முறையும் இந்த பனியுகம் சுமார் 200 வருடங்களுக்கு நீடிக்கிறது என்றும் அறிந்தார். அத்துடன். அப்படிப்பட்ட ஒரு சின்ன பனியுகம் கி.மு 2,200 வில் வந்ததாக வும் அவர் ஆராய்ந்து கண்டறிந்தார். ஜெரார்டின் நண்பரான பீட்டர் டிமெனோகல் என்பவரும் உலகம் முழுவதும் அதே நேரத்தில் எப்படி தட்ப வெப்பம் இருந்திருக்கிறது என்பதை ஆராய்ந்தார்.



மணலிலிருந்து, மகரந்தம் வரை எல்லாவற்றையும் ஆராய்ந்த போது இந்தோனேஷியாவிலிருந்து மத்திய தரைக்கடல் பிரதேசம் வரை, கிரீன் லாந்திலிருந்து வட அமெரிக்காவரை எல்லா இடங்களிலும் தீவிரமான தட்பவெட்ப மாறுதல் அதே வருடத்தில் நடக்கிறது என்ற உண்மை வெளிப்பட்டது.ஃபெக்ரி நம்பிய எல்லாவற்றையும் அறிவியலாளர்கள் உறுதிப்படுத்திவிட்டார்கள். தீவிர தட்பவெட்ப மாறுதல் காரணமாக 4,200 வருடங்களுக்கு முன்னர் பெரும் மனித சோகம் நடந்தது. இப்போதுதான் அதை நாம் அறிந்து கொள்கிறோம். இந்தப் புதிரின் கடைசிப் பகுதிகளை விடுவிக்க ஃபெக்ரி எகிப்தில் நைல் நதியிலிருந்தே தீவிரமான தட்பவெட்ப மாறுதலுக்காக ஆதாரத்தை கண்டுபிடிக்க முயன்றார்.

பழங்காலத்திலிருந்து இன்று வரை நைல் நதியின் துணை நதி வந்து நீர் நிரப்பும் ஒரு பெரிய ஏரியின் அடியில் தோண்டி எடுத்த படிவங்களிலிருந்து அந்த ஆதாரத்தைக் கண்டுபிடித்தார். பழைய மன்னராட்சி நொறுங்கிய அந்தக் காலக் கட்டத்தில், அந்த மாபெரும் ஏரி முழுக்க முழுக்க காய்ந்து போய் இருந்தது என்பதைக் கண்டறிந்தார்.

வரலாற்றிலேயே அந்த ஒரு முறை மட்டுமே அந்த ஏரி முழுக்கக் காய்ந்திருக்கிறது. அன்க்டிஃபியின் கல்லறையில் எழுதப்பட்டிருந்த வரிகள் உண்மைதான் என்று கடைசியில்



ஃபெக்ரி நிரூபித்து விட்டார். மக்களை அப்படிக் கொன்றது இயற்கைதான் என்று ஆராய்ந்து முடிவு செய்தார்.

உண்மையிலேயே எகிப்திய பிரமிட்டுகளும், எகிப்திய கலைகளும் இன்றுவரை மர்மமாகவே இருக்கின்றன. எத்தனையோ அதிசயங்கள் உள்ளே புதைந்து போயுள்ளன. அவை வெளிப்படுத்தப்படும் போது எமது கற்பனைகளையும், சிந்தனைகளையும் தாண்டிய அதிசயக்கத்தக்க மாற்றங்களை கொண்டனவாக வெளிவருகின்றன.

உலகத்தில் எத்தனையோ விடையங்கள் இன்றும் ஆராய்வதற்காக இருக்கின்றன. இன்னும் எத்தனை அதிசயங்கள் வெளியில் வரப்போகின்றன. அதுவரை நாங்களும் பொறுத்திருப்போம்.



# "களியிலே கைவண்ணம்"

கவிஞர் திமிலைத் துமிலன்

# நெருநல் நினைவுகள்


ஒரு மாதக் கற்பித்தல் பயிற்சி நான் ஆனைப்பந்தி ஆண்கள் பள்ளியில் எட்டாம் வகுப்பில படிப்பிச்சிக் கொண்டிருந்தன். அது கணக்குப்பாடம் எனக்குக் கொஞ்சம் பயம். ஆனாலும் தவிர்க்க முடியாது. எல்லாப் பாடமும் நான்தான் படிப்பிச்சியாகவேணும்.

கணக்கை கரும்பலகையில விளங்கப்படுத்திப் போட்டு, கணக்குச் செய்யக்குடுத்தன். ஒரு பொடியன் பிழையாகச் செய்து போட்டான். அத நான் கவனிக்காம அடுத்த கணக்கத் துவங்கினன், "ஏய் , நிறுத்து நிறுத்து, நீங்கெல்லாம் என்னத்துக்கு வாறீங்க? புள்ளையளக் கெடுத்துக் குட்டிச் சிவராக்கவா?" கத்திக் கொண்டே பாஞ்சி வந்தார் அந்தத் தடிச்ச வகுப்புத் வாத்தியார்.நான் திடுக்கிட்டுப் போனன். "கணக்கா படிப்பிக்கிறய்? கணக்கு" எண்டு மீண்டும் துவங்கியவர் ஏதேதோ வெல்லாம் சொல்லிச் சொல்லி கொம்பிக் கொண்டிருந்தார். அதுக்கு மேலும் அமைதி காக்க எனக்கு முடியல்ல.

"மாஸ்டர், நீங்க வகுப்பு வாத்தியாரெண்டா தேவையில்லாத பேச்செல்லாம் பேசத்தேவல்ல. நாங்க பயிற்சி பெறத்தான் வந்தனாங்க. பிழையெண்டா அதச் சொல்லித் திருத்துங்க. அத உட்டுப் போட்டு ஏன் இப்பிடிக் கொம்புறையள்?" எண்டு எதிர்த்துக் கேட்டன். அவர் ஏதோ தாறுமாறாகப் பேச வாயெடுத்தார். அதுக்கிடையில வந்தேறினார், பண்டிதர் பூபாலபுள்ளை. பண்டிதரக் கண்டதும் அந்த வாத்தியார் வாலைச் சுருட்டிக் கொண்டார். பண்டிதருட ஒரு குணம், தன்ட மாணவரை ஆருக்கும் விட்டுக் குடுக்க மாட்டார். பேசிற படி பேசி அந்த வாத்தியாரை அமைதிப் படுத்தியதோடு நில்லாம என்னப் பத்தியும் எடுத்துச் சொன்னார். "கிருணணபிள்ளை சாதாராண ஆளில்ல. எதிர்காலத்தில ஒரு லட்சிய நல்லாசிரியர் நாமும் அவரைத் தட்டிக் குடுக்க வேணும்" கொம்பியெழும்பிய அந்த வாத்தியாரும் அமைதியானார். அதுக்குப்புறகு அந்த வாத்தியாரைப் பல இடங்களில நான் சந்திச்சிருக்கன். அவர் முகம் குடுத்துப் பேசவேயில்ல.

பூபாலப்பிள்ளைப் பண்டிதரையும் பண்டிதை கங்கேஸ்வரியையும் கலாசாலையில தமிழ்த்தந்தை, தமிழ்த்தாய் எண்டு சொல்றது வழக்கம். பண்டிதர் மாணவருக்காகப் போராடுறதில எப்பவும் முன்னுக்கு நிப்பார்.

கலாசாலையில உணவுக்குப் பொறுப்பு உணவு மந்திரிதான் என்டாலும் ராசதுரையார்தான் உண்மையான பொறுப்பாளி. பெரும்பாலும் காலைச்சாப்பாடு பாண் அல்லது இடியப்பமாக இரிக்கும். காலையில




பயிறு அவிச்சிக் குடுத்தா, அது சத்துள்ளதாகவும் செலவு குறைவாகவும் இரிக்கும் எண்ட ராசதுரையருட யோசனைய உணவுக்குழுவும் ஏத்துக் கொண்டதால ஒரு நாள் காலை, பயிறு அவிச்சி வைக்கப்பட்டிருந்திச்சி. மாணவர் பலருக்கு அது பழக்கமில்லாததால சாப்பிட மறுத்து உண்ணாப் போராட்டத்தில இறங்கியாச்சி. என்னாலயும் ஒண்டும் செய்ய முடியல்ல. நானும் அவங்களோட ஒத்துழைக்கிறது அவசியமாப் போச்சி. இது பண்டிதருக்கு எட்டினவுடனே ஆவேசத்தோட ஓடி வந்தவர் அதிபருட அறைக்குள்ள பூந்து கொம்பல் எண்டா தாறுமாறான கொம்பல், விரிவுரையாளர்களும் அவருக்குச் சப்போட், அதிபர் திக்குமுக்காடிப் போனார். பண்டிதருட காலுல உழாத குறையாக அவரச் சமாதானப்படுத்திப் போட்டு என்னைக் கூப்பிட்டார். "கிருஷ்ணா என்ன இது? ஏற்கனவே எனக்கேன் சொல்லல்ல? பத்திரிகைகளிலயும் செய்தி வந்திருக்குதாம். பயறு கொடுப்பது எனக்கே தெரியாதே! அப்போ திட்டம் போட்டுத்தான் நடக்கிறதா?" எண்டு கேட்டார். உண்மைதான். இப்படி நடக்குமெண்டு முந்தியதாவே எனக்குத் தெரியும். ராசதுரையரிட்டயே சொல்லியிரிக்கலாம். ஆனாச் சொல்லல்ல. நான் ஒண்டும் பேசாம நிண்டன். அதிபருக்கு விளங்கியிரிக்க வேணும் பிரதமர் பதவியை நான் ஏன் மறுத்தேன் எண்டு. "சரி நீர் போகலாம்" எண்டார். பிரச்சினை ஒருமாதிரியாகச் சமாளிக்கப்பட்டது.

அதிபர் கனகலிங்கம் உளவியல் பாடம் எடுத்தார் எண்டு நினைக்கிறன். பெரும்பாலும் அவர் வகுப்புக்கு வரவே மாட்டார். எப்பவெண்டான்ன வந்தாரெண்டா அருமையாகப் படிப்பிப்பார். வாரத காரணம் பலருக்குத் தெரியாது. அவர் ஒரு 'ஆஸ்மா' பேர் வழி அதனால குடிச்சிப் போட்டுப் படுத்திடுவாராம் எண்டு கேள்வி. அதனாலதான் நிருவாகத்திலயும் சரியாக அக்கறை காட்ட முடியல்ல. நிருவாகமெல்லாம் ராசதுரையருட கையிலதான்.

என்ட தலையில சுமத்தப்பட்ட பிரதமர் பதவி தேவையில்லாத ஒரு பாரம். அந்தக் கடமையை நான் சரியாகச் செய்யல்லையெண்டு அதிபரும், ராசதுரையரும் கோவிச்சா அது ஞாயம்தான். ஆனா அவங்க கோவிச்சதாகத் தெரியல்ல. காரணம் என்ட அமைதியான குணமாயிரிக்கலாம்.

இத்தனை தில்லு முல்லுகள் இருந்தாலும் 1958 ஆண்டு, ஆசிரியர் கலாசாலை வரலாற்றுல ஒரு பொற்காலம் தான். காரணம், அதுக்கு முன்னும் பின்னும் எக்காலமும் இல்லாத வகையில அந்த ஆண்டுதான் ஒரு சிற்பக் க்ண்காட்சி நடந்தது. அதுக்கு முபக்காரணம் சித்திர ஆசிரியர் தங்கத் துரையார்தான். கலாசாலையிலேயே மாணவர்களைச் சரியாக அறிஞ்சி வச்சிருந்தவர் அவர்தான். நான் மண்ணாயிரிக்கக்குள்ளயே ஒரு பால





முருகன் சிலையை வீட்டில செஞ்சி வச்சிருந்தன். அது எங்கட வெளி மண்டபத்தில இருந்திச்சி. அதுக்குப் பக்கத்தில ஒரு சாய்மனைக் கதிரையில அப்பா இரிக்கிறது வழக்கம். எப்போதும் அப்பாட்ட வெத்திலை வச்சிக் கேக்கிறதுக்குச் சனங்கள் எல்லாம் கற்பூரம் கொழுத்தி அந்த முருகனை வணங்கத் தவறுவதில்லை. சுரக்கமாகச் சொல்லுறதெண்டா நாலுஅடி உயரத்துல நான் செய்த அந்த முரகனுக்கு உயிர்குடுத்தது அப்பாதான். அந்த முருகன் சிலையை உருவாக்கியது நான்தான் எண்டு தங்கத்துரையர் எப்பிடியோ அறிஞ்சிருந்தார். அதனால என்னைச் சரியாகப் பயன்படுத்திக்கொள்ள அவர் திட்டம் போட்டதில அதிசயமில்ல.

ஒரு நாள் களிமண் வண்டியொண்டு கலாசாலைக்குள்ள வந்தது. அந்தக் களிமண் பெண்கள் விடுதிக்குக் கீழயுள்ள அறைக்குப் பக்கத்தில கொட்டுப்பட்டுது. அதத் தொடர்ந்து இன்னும் ரெண்டு வண்டிக்களிமண் வந்து சேந்துது. சித்திரப்பாட நேரம் தங்கத்துரையர் என்னைப் பாத்துக் கேட்டார். “கிருஷ்ணா, இந்தக் களிமண் எதுக்கென்று தெரியுமா?” நான் பேசல்ல ஆனாலும் எனக்கு விளங்கிப் போச்சி அவரே சொன்னார். “இந்தக் களியெல்லாம் சிலைகளாக உருவாகும். அதுக்குப் பொறுப்பு கிருஷ்ணாதான்”

விணைத்திறன் மிக்க சேவை
நிர்வாகம் மற்றும் பிரஜைகளின்
ஆலோசனை பெறல்
என்பவற்றினூடாக பொருளாதார
வளர்ச்சியினை
மேம்படுத்துவதற்காக பிரதேச
சபை, நகர சபை, மாநகர சபை
என்பவற்றுடன் இணைந்து
செயற்படும் ஒரு உயரிய
அமைப்பே
"இலங்கை ஆசிய நிலையம்"
உள்ளூராட்சி சபைகளின்
வெளிப்படையான தன்மையை
மேம்படுத்தி, சிறந்த பொருளாதார
வளர்ச்சியை பொதுமக்கள்
அடைவதற்கு அர்ப்பணிப்புடன்
பணியாற்றுவதே ஆசிய
நிலையத்தின் முக்கிய
நோக்கமாகும்.



The Asia Foundation



ExpoAir
your friend in the skies...
Experience Friendliness . . .
Fly ExpoAir. . .
Discover Jaffna . . .
Expo Aviation (Pvt) Ltd.